Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலையில் BBQ
தொடர்பு: 0771064385 0776943479
70/6, K.K.S. Road, JAFFNA
(C/1615)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 16 சனிக்கிழமை (30.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 273


இந்தியப் பிரதமரிடம் முறையீடு 06


கடுப்பேத்துகிறார் மை லோர்ட் 10


வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்க... 13


காரைநகரில் மழைநீர் சேகரிக்க... 14



2017 இல் பரிசோதனை 17

# 'உதயன்' உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பிரசுரிக்கிறது

## ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கோரினார் உதயன் ஆசிரியர்

(நமது நீதிமன்ற நிருபர்)

எந்தவித உண்மையுமற்ற செய்தியொன்றை பிரசுரித்து நீதிமன்றிற்கு அபகீர்த்தி ஏற்படுத்திய குற்றத்திற்காக நீதிமன்றில் சமூகமாயிருந்த சந்தேக நபர்கள், குற்ற வாளிகள், 'உதயன்' பத்திரிகை உரிமையாளர் சரவணபவன், நீதிமன்ற பாவனையாளர்கள், நீதிமன்ற ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், பொலிஸார், சிறைக் காவலர்கள், மற்றும் சட்டத்தரணிகள் முன்னிலையில் பகிரங்க மன்னிப்புக் கோரினார் 'உதயன்' பத்திரிகை ஆசிரியர்,

தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகியிருந்த தமிழரசுக் கட்சி சட்டத்தரணி சுமந்திரனிடம் யாழ் நீதவான் மா.கணேசராசா மன்னிப்புக் கோரியதாக எந்த ஆதாரமுமற்ற செய்தியொன்றை நீதிமன்றிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் பிரசுரித்தமைக்காகவே 'உதயன்' ஆசிரியர் நேற்று பகிரங்க மன்னிப்பு கோரியிருந்தார். அத்துடன் நாளைய (இன்று) 'உதயன்' பத்திரிகையில் முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து இந்த உண்மையற்ற செய்தியை அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் பிரசுரித்தமைக்காக பத்திரிகை வாசகர் அனைவரிடமும் மற்றும் பொதுமக்களிடமும் பகிரங்க மன்னிப்புக் கோரவும் நீதிமன்றிடம் உத்தரவாதம் அளித்திருந்ததைத் தொடர்ந்து அவர்மீதான விசாரணையை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை ஒத்தி வைத்த நீதவான் அவரை விடுதலை செய்திருந்தார்.

பார்வையாளர்களாலும், பாவனையாளர்களாலும் நிறைந்திருந்த நீதிமன்ற வளாகத்தில் 'உதயன்' பத்திரிகையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கமும், யாழ் சட்டத்தரணிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தி யாழ் நீதித்துறைக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் றெமீடியஸ், ரெங்கன், ராஜரட்ணம், செல்வி ஸர்மினி, செல்வி ராயப்பு, செலஸ்ரின், கணதீபன், சிறீகாந்தா, முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதிகளான வரதராஜா, விக்னராஜா மற்றும் பலர் ஆஜராகியிருந்தார்கள்.

வழக்கு கூப்பிடப்பட்டு 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் நீதிமன்றில் தோற்றியிருந்த போது, அவரை கடுமையான தொனியில் எச்சரித்த நீதவான் தான் வாழ்க்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவரிடமும் மன்னிப்புக்கேட்டதில்லை எனவும், 'உதயன்' பத்திரிகைச் செய்தி உண்மைக்குப் புறம்பானதெனவும், பத்திரிகை குறிப்பிட்ட செய்தியைப் பிரசுரிக்கு முன்னர் நீதிமன்றிடம் அதனை சரிபார்த்திருக்க வேண்டுமெனவும், தான் ஒரு சாதாரண சட்டத்தரணியாக இருந்திருந்தால் இப்படியான அவ்தூறுகளைக் கவனத்தில் எடுத்திருக்க மாட்டேன் எனவும், ஆனால் தற்போது ஒரு நீதவான் என்ற முறையில் தன்னைப்பற்றிய இந்தச் செய்தி யாழ் நீதிமன்றை

19 ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் சிக்கியது பேருந்து ஐம்பது பயணிகள் காயம்

(வவுனியா)

வவுனியா - யாழ். வீதியில் சாந்தசோலை சந்தியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் சிக்கி 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து 4.30 மணியளவில் சுமார் 80 பேருடன் முல்லைத்தீவுக்குச் சென்ற பேருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## டிப்ளோமா பட்டதாரிகளுக்கு வாய்ப்பு ஆட்சேர்ப்பில் இணைக்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி டிப்ளோமா பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனம் வழங்குவதாகவும், அதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உறுதியளித்துள்ளார்.

யாழ். உயர் தேசிய கணக்கியல் முகாமைத்துவ வர்த்தகப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தலைமையில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு யாழ். குருநகர் தொழில்நுட்பக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து டிப்ளோமா பட்டதாரிகள் அனைவரும் இணைந்து நடைபவனியாகச் சென்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை அவரின் அலுவலகத்தில் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அதேவேளை ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றையும் அவர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா சிறைச்சாலையில் அதிரடி சிறைக்காவலர்கள் மூவரும் மீட்பு

### யுத்தகளமாகியது சிறைக்கூடம்

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளால் பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ள 3 சிறைக் காவலர்களையும் விசேட அதிரடிப்படையின் குழு மதியம் 1.00 மணியளவில் அரசியல் கைதிகளிடம் இருந்து மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பூசா முகாமுக்கு மாற்றப் பட்ட 3 அரசியல் கைதிகளில் அனுராதபுர நீதிமன்றில் வழக்குள்ளதாக அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரை மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் மேனன் பேச்சு



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பொன்சேகா தேர்தலுக்கு தயார் இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் தனது ஜனநாயகக் கட்சி போட்டியிடமாட்டாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார். நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையில் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## துணுக்காய் நகர அபிவிருத்திக்கு 451 மில்லியன் ஒதுக்கீடு

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் நகர எழுச்சித் திட்டத்திற்கு 451 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டங்களுக்கென 2011 ஆம் ஆண்டில் 130 மில்லியன் ரூபாவும் 2012 ஆம் ஆண்டுக்கென 200 மில்லியன் ரூபாவும், 2013 ஆம் ஆண்டுக்கென 121 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் ஐயன்குளம் சந்தைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## வடக்கு மாகாணத் தேர்தல் அடுத்த வருடம் செப்ரெம்பரில்

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நிச்சயமாக நடத்தப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறுதியளித்துள்ளார்.

தற்சமயம் மூன்று மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அச்சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் (2012) செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ளன. அவை நடைபெற்று சரியாக ஒரு வருடத்தில் அதாவது 2013 செப்ரெம்பர் மாதம் வடமாகாண சபைத்தேர்தல்கள் நடத்தப்படும் என்ற தமது முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் செயலால்

# வன்னியில் காணியற்றவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத நிலையில் அரசு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்பத்தைந்து வீதத்திற்கும் அதிகமானவர்கள் அனுமதிப் பத்திரங்கள் அற்ற காண்களிலேயே குடியிருக்கின்றனர். ஏனெனில் நீண்ட காலமாக இவர்களுக்கு அரசாங்கத்தால் காணிகளை வழங்கக்கூடிய சூழல் இருக்கவில்லை. இவர்கள் வீட்டு வசதி தொடக்கம் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறிவோம். ஆனால் தற்போது இப்பகுதியில் பாரிய நிதியீட்டங்களை மேற்கொள்ள முடியாதுள்ளோம். ஏனெனில் இப்பகுதியில் வாழும் மக்களுக்கு முறையான காணி அனுமதிப் பத்திரங்கள் இல்லை. அவற்றை வழங்க அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நீதி மன்ற வழக்குத்தாக்கலுக்கமைவாக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என ஈ.பி. டி.பி. யின் உறுப்பினரும் நாடாளு மன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அப்பகுதிக்கு சென்று மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இது ஏழை மக்களின் துரதிஷ்டம் என்றே கருத முடியும். அதுமட்டுமல்ல ஆணையிறவு அ.த.க பாடசாலையினை இங்கு அமைக்கத் திட்டமிட்டோம். அதற்காக ஐந்து ஏக்கர் காணியையும் ஒதுக்கீடு செய்துள்ளோம். அதற்கும் காணி உரிமம் எனும் விடயம் முட்டுக்கட்டையாக உள்ளது. இருப்பினும் இம் மக்கள் எதிர் கொள்ளும் காணிப் பிரச்சினைக்குத் .தீர்வுகாண மாற்றுத் திட்டங்களைக் கொண்டுவர முயற்சித்து வருகின்றோம்.

இருப்பினும் இப்பகுதியில் இவ்வருட இறுதிக்குள் பாடசாலைக்கான வகுப்பறைக் கட்டடங்களும் அமைத்துக் கொடுக்கப் படும். மேலும் சிவபுரத்தில் வசிக்கும் காணியற்ற மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு அப்பகுதிக்குள்ளேயே காணப்படும் எனவும் தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தன், வடமாகாண சபையின் பிராந்திய ஆணையாளர், சைல்பண்ட நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட அலுவலர் விமலகாந்த், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி புவனராஜா, சோ.ஆ. நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் பொன்கலன், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் குடியேற்றத் திட்ட அலுவலரான பவதாரணி, கிராம அலுவலரான அம்பிகைபாலன் ஆகியோரும் சுமார் நூற்றுக்கணக்கான கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

## கூடைப் பந்தாட்டம் தொடர்பில் இன்று கருத்தரங்கு

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின்ஏற்பாட்டில் கூடைப்பந்தாட்டத்தில் புதிய தொழில்நுட்ப நடைமுறைகள் சம்பந்தமான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின்செயலாளர் செ. ரமணன் அறிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் கூடைப் பந்தாட்டத்தில் ஆர்வம் உள்ளவர்களும் கூடைப்பந்தாட்ட கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் கழக வீராகளும் பாடசாலை வீரர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### தேவை

துவிச்சக்கர வண்டி திருத்தத் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ப. விஜயகுமார், இல.458, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (R/082)


## நீடித்த தர்மத்தால் நெடிதுயர்ந்த அன்னை



செந்தமிழ் அரசி, சிவத்தமிழ்ச் செல்வி  
சீரிய தங்கம் மாபெரும் வித்தகி,  
சந்தனம் அன்ன சிவமய முதல்வி  
சார்ந்த தெய்வீக சுரபி,  
நொந்தவர் நிமிர்ந்திடத் தாங்கிடும் கலாநிதி  
தங்கம்மா அப்பாக்குட்டி,  
நீடித்த தர்மத்தால் துர்க்காபுரி வெல்லுமே  
நான்காம் குருபூஜை சொல்லுமே இன்று.

- கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ் மாறனும், சிறப்பு அதிதியாக தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலமாரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரைகளை சாமுண்டீஸ்வரி தேவஸ்தான அர்ச்சகர் உ. நந்தபாலன், அளவெட்டி இலங்கை அமெரிக்கன் மிஷன் சபையைச் சேர்ந்த அருட்பணி யூட் சுதர்ஷன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுரையை யா/ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர் மா.பா.மகாலிங்கசிவம் வழங்கவுள்ளார். (44)

◈ ◈ ◈ ◈ ◈ ◈

இணுவில் மத்திய கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி யின் சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரும், பழைய மாணவனுமான வே.பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பரிசில்களை திருமதி செல்வக்குமாரி ஸ்ரீகணேசன் வழங்கவுள்ளார்.

## மாவட்ட ஆங்கில தினப்போட்டிகள்

யாழ்.மாவட்ட ஆங்கில தினப் போட்டிகளுள் எழுத்து மூல நிகழ்வுகள் எதிர்வரும் யூலை மாதம் 8ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும், பேச்சுப்போட்டிகள் யாவும் யூலை மாதம் 14ஆம் திகதி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கில் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன், யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் கருத்துரை வழங்குவதைக் காணலாம். (44)

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : புஸ்பநாதன் கபிசன்

முகவரி : லவ்லேன், உடுவில், சுன்னாகம்.



5 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர் : தர்மகுலசிங்கம் தர்ஷாந்

முகவரி : சாந்தை, பண்டத்தரிப்பு.

## நேற்று திருமண பந்தத்தில் இணைந்த



அருள்குமார்  
திகழ்மதி



அலெக்சாந்தர்  
அனற்சுனீத்தா

தம்பதியினரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்

தினமுரசு குடும்பம்

# அவசர தொலைபேசிமூலம் 44 ஆயிரம் முறைப்பாடுகள்

## — தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை —

(வவுனியா)

அவரச தொலைபேசி இலக்கமான 1929 ஆனது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தினுள் 44ஆயிரம் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்ப பெற்றுள்ளது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் பாதிப்படைந்த பிள்ளைகளின் வீடுகளை புனரமைப்பதற்காக பண உதவி வழங்கும் நிகழ்வின்போது இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.


இதன் போது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, இம் முறைப்பாட்டின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு 16 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அவற்றில் 14 முறைப்பாடுகளுக்கு தர்வு காணபட்டுள்ளதாகவும் 2 முறைப்பாடுகள் செயல்முறையில் உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டதுடன், மேலுதிகமாக கிடைக்கப்பெற்ற 7 முறைப்பாடுகள் சம் பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆறு மாதங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா அலுவலகத்திற்கு 1929 என்ற அவசர தொலைபேசி அழைப்பின் ஊடாக 9 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் அவசர தொலைபேசி மூலம் கிடைத்த 9 முறைப்பாடுகளில் 6 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டதாகவும் 3 முறைப்பாடுகள் செயல்முறையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன், மேலதிகமாக கிடைக்கப்பெற்ற 4 முறைப் பாடுகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிககப்பட்டது.

இந்நிகழ்வில் பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளான 50 பிள்ளைகளின் வீடுகளில் சிறு திருத்த வேலைகளுக்காக 50000 ரூபா வீதம் பண உதவி வழங்கப்பட்டது. இதன்போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி அனோமா திசாநாயக்க, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே. பந்துல கரிச்சந்திர, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா இணைப்பாளர் செல்வகுமார், வவுனியா வடக்கு மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர்கள் உட்பட அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (160)

## எங்கள் துயர் தீர்த்தருள எழுந்தருள்வாய் நாகபூஷணி!



தங்கநிறச் சுந்தரியே தாயே நாகம்மாளே!
தமிழ்விஞ்சும் அம்பிகையே தாயே நாகம்மாளே
அங்கமெலாம் அரவணிந்த நாயகியே நாகம்மாளே
ஆதிசிவனை அரவணைத்துக்கொண்டவளே நாகம்மாளே
குங்குமப் பொட்டோடு அமர்ந்தவளே நாகம்மாளே
குமிண் சிரிப்போடு அருள்பவளே நாகம்மாளே
எங்கள் துயர் தீர்த்தருள எழுந்தருள வேண்டுமம்மா
எழிலான மணிபல்லவ மமர்ந்தவளே நாகம்மாளே.

-மதுரகவி-

(நயினை நாகபூசணி மஹோற்சவ கால பாமாலை)

## சகல சௌபாக்கியமருள் பெருமானே!



மருவுக்திர்காம மிசை எழுந்தருளவே விரும்பி
மரக்காழமிசை ஆழ்கடலில் வந்து - அடியார்கள்
மனமகழ ஈழமண்டலமா வன்னி வனமுற்று
மன நிறையு வாழ்வு கந்த - வடிவேலா
கனகமயில் ஏறி பன்னிரு கரமுடையனாக வெங்கள்
கடவுள் எனவே அமர்ந்த - கந்தவேளே
அருணகிரிநாதன் அன்று அளித்த சந்ததமிழ்
அழகுநிறை மாலை அணி - குருநாதன்
அழகு திகழ் வள்ளி குஞ்சரி - மண வாளன்
அவனி திகழ் பொலிகண்டி கந்தாரண்யம் விளங்கு
அதிசய சகல சௌபாக்கியமருள் பெருமாளே.

தி.மயூரகிரி சர்மா, நீர்வேலி.

(பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி மஹோற்சவம்: இன்று 12ஆம் திருவிழா)

## கலை அரங்கு நிர்மாணம்

(தும்பளை)

தும்பளை மேற்கு ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்தில் கலை அரங்கு ஒன்றினை நிர்மாணிப்பதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்பிரதேச இளைஞர்களின் நிதிப்பங்களிப்புடன் இவ்அரங்கு நிர்மாணப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன.

மேல்கூரைப்பகுதி வேலைகள் நிறைவுற்ற நிலையில் நிலத்தை சீரமைக்கும் பணிகள் தற்போது நடை பெற்று வருகின்றன.

ஊரிலுள்ள கலைஞர்களும் இளைஞர்களும் திறமையை வளர்த்தெடுக்கும் களமாக இவ்வரங்கு அமையும் எனவும் 2013ஆம் ஆண்டளவில் இக் கலை அரங்கின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (62)

## தகவல் சேகரிப்பு

(பருத்தித்துறை)

அதிபர் இடமாற்ற தகவல் சேகரிப்புப் படிவங்கள் சகல வலயக்கல்வி அலுவலகங்களினாலும் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் படிவங்களை பூரணப்படுத்தி கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் கடமை நிறைவேற்று அதிபராக இருப்பின் அந்நியமனத்திகதியையும் குறிப்பிட்டு ஒப்படைக்குமாறு வட மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

## நயினாதீவு உற்சவத்திற்கு விசேட பேருந்து சேவை

(வடமராட்சி)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவிற்கு வடமராட்சியிலிருந்து செல்லும் அடியார்களின் நன்மை கருதி 2 பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

குறித்து இருதினங்களிலும் காலை 6 மணியிலிருந்து பருத்தித்துறையிலிருந்து குறிகாட்டுவான் வரை இப்பேருந்து சேவைகள் இடம்பெறவுள்ளதுடன் தேர்த்திருவிழாவன்று 4 வழிப் பேருந்து சேவைகளும் தீர்த்தத் திருவிழாவன்று அடியார்களின வருகையை தொடர்ந்து மேலும் சேவைகள் ஈடுபடுத்தப் படும் எனவும் பருத்தித்துறை சாலை முகாமையாளர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார். (116)

## நாய்க்கடியினால் 10 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நாய்க்கடிக்கு இலக்காகி 10 பேர் நேற்றுமுன்தினம் மட்டும் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வீட்டு வளர்ப்பு நாய் மற்றும், கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிறுவர் முதல் பெரியோர் வகையில் நாய் கடிக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 3 பேரும், மதியம் 4 பேரும், மாலை 3 பேரும் யாழ்.போதனா வைத் தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். (எஸ்)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்

(தும்பளை)

தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 2 மணிக்கு சனசமூகநிலைய மேல்தளத்தில் தலைவர் பா.ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.யோகேஸ்வரி,கிராம சேவகர் தி.சாருமதி ஆகியோர் முன்னிலையில் இடம்பெறவுள்ளது. (62)



பாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட கல்வியாளர்கள், மற்றும் மாணவர்களும், விருந்தினர்களும் மேடையில் நிற்பதையும் காணலாம் (20)

## வட மாகாண கல்வித்துறையின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு



(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வித்துறையின் முன்னேற்றம் தொடர்பாக மீளாய்வுக்குரிய விசேட கூட்டம் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலக கேட்போர்கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

கடந்த இரண்டு வருடங்களில் (2010-2011) வட மாகாண கல்வித்துறையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் இங்கு மீளாய்வு செய்யப்பட்டது.

குறித்த இரண்டு ஆண்டு காலப் பகுதியில் வட மாகாண சபை, மத்திய அரசு, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான அறிக்கையினை தயாரிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநரினால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

வட மாகாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் மற்றும் வட மாகாண கல்வித்துறையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

## விபரம் திரட்டல்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 70வயது முதியவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான விபரம் திரட்டும் பணிகள் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் நவாலி கிழக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் முதியவர்களின் விபரம் திரட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (104)

பணத்திற்குக் கடல் நீரின் குணம் ஒன்று உண்டு. கடல் நீரைக் குடிக்கக் குடிக்கத் தாகம் அதிகமாகும். - ஷோப்பன் ஹெறாபர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## பொய்ச் செய்திக்குத் தண்டனை!

பொய்யான செய்தியொன்றை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகையின் ஆசிரியர் நேற்று யாழ் நீதிமன்றத்தில் அனைவர் முன்னிலையிலும் பகிரங்க மன்னிப்பைக் கோரியுள்ளார். உண்மையைத் திரித்து மக்களுக்குப் பொய்யான ஆவேசங்களை ஊட்டும் விதமான செய்திகளை தமிழ்ப் பத்திரிகைகள் அதிலும் குறிப்பாக சில குடாநாட்டுப் பத்திரிகைகள் பலகாலமாகவே எவ்விதப் பொறுப்புணர்வுமின்றிப் பிரசுரித்து வருவது அனைவரும் அறிந்ததே.

இப்போது யாழ் நீதவானுக்கும், நீதித்துறைக்கும் அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் பொய்ச் செய்தியை எழுதியமைக்காக நேற்று நீதிமன்றத்திலும் இன்று அப்பத்திரிகையின் முதற்பக்கத்திலும் மன்னிப்புக் கேட்டிருக்கும் இதே பத்திரிகை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதும் இதேபோன்ற அவதூறான செய்திகளை எவ்வித ஆதாரமுமற்று காழ்ப்புணர்வில் எழுதியமைக்காக இப்பத்திரிகைக்கெதிரான இரண்டு வழக்குகள் யாழ் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன.

அதேபோன்று இந்தப் பத்திரிகையின் அதிபரான தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர், தான் பாராளுமன்றத்தில் பேசாத விடயங்களையும் பேசியதாகத் தனது பத்திரிகையில் பிரசுரித்தமைக்காகவும் பாராளுமன்ற அமைப்புக் குழுவினால் விசாரிக்கப்பட இருக்கிறார்.

பத்திரிகை என்பது மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த ஊடகமாகச் செயற்பட வேண்டும் என்கிற நிலையை உதறிவிட்டு நழுவிச் செல்லும் போது, பத்திரிகையாளர்களும் தவறான அரசியல்வாதிகளைப் போலவே மக்களை அவலத்திற்குள் தள்ளி லாபம் தேட முற்படுகிறவர்களாக மாறிப் போகிறார்கள். அச்சில் வருவதையெல்லாம் மக்கள் நம்புகிறார்கள் என்பதை உணர்ந்துகொள்வதால் வரும் போதை 'ஊடகத் தமிர்' 'ஊடகப் பயங்கரவாதம்' என்கிற நிலைகளுக்குச் சிலரை இட்டுச் சென்றுவிடுகிறது.

பத்திரிகையில் எதையும் எழுதலாம், மக்களை உணர்ச்சி வசப்படுத்துவதால் வாக்குகளை அள்ளலாம் என்பதைக் காட்டி மிரட்டியே பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுவிட்ட முன்னுதாரணம், பத்திரிகையை ஒரு மிரட்டல் சாதனமாகவே தொடர்ந்து பாவிக்கும்படியான அகங்காரத்தைத் தருகிறது. இதன் விளைவே யாரையும் எப்படியும் எதையும் எழுதி அவதூறுகளைப் பரப்பலாம் என்ற எண்ணத்தை உருவாக்கி விடுகிறது.

ஆனால் நீதி என்று ஒன்றிருக்கிறது. அதன்மேல் நம்பிக்கை வைத்துள்ள மக்கள் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் மறந்து பத்திரிகைகள் தங்களையும் வன்முறை ஆயுதமாக்கிக் கொள்ளும் போது, நீதி இவ்விதமான நினைவூட்டலைச் செய்து அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டி வருகிறது. அதனால்தான் நீதிமன்றில் சமூகமாயிருந்த சந்தேக நபர்கள், குற்றவாளிகள், நீதிமன்ற பாவனையாளர்கள், நீதிமன்ற ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், பொலிசார், சிறைக்காவலர்கள், மற்றும் சட்டத்தரணிகள் எல்லோர் முன்னிலையிலும் அவர்களைச் சாட்சியாக வைத்தும் பத்திரிகையாளர் பகிரங்க மன்னிப்பைக் கோரவேண்டி ஏற்பட்டிருக்கிறது.

ஒருவகையில் பத்திரிகையாளர் என்பவரும் இந்தப் பொது மக்களில் ஒருவரே. இவர்களை விடத் தங்களை மேலானவர்களாகவும், தங்களுக்குச் சிறப்புத் தகுதிகள் இருப்பதாகவெல்லாம் கற்பித்துக் கொள்வது, தம்மிடமிருக்கும் ஊடகத்தைப் பயங்கரவாதிகளின் ஆயுதம் போன்று பாவிக்க முற்படுகிறவர்களின் ஆவலாதிதான்!

சிலருக்கு வீரமாக அவதூறுகளை அள்ளி வீசுவதும், பின்னர் இரகசியமாகக் குழைந்தோ பகிரங்கமாகத் தலைகுனிந்து நின்றோ மன்னிப்புக் கோருவதும்தான் தங்களது அரசியல் சுழியோட்டம் என்று நினைக்கலாம். அதில் லாபமடைந்து கொண்டிருப்பதாகவும் எண்ணலாம். ஆனால் நீதியின் தண்டனையிலிருந்தோ மக்களின் அவலங்களில் தள்ளிவிட்டுப் பதில் சொல்லாமலோ எப்போதும் விலகி ஓடிவிட முடியாது. - ஆசிரியர்

# முழுக்கல்வித்துறைக்காகவே பணிப்புறக்கணிப்பு இடம்பெறுகிறது

(கொழும்பு)

முழு கல்வித் துறைக்காகவே தாம் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதாகவும் தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களை நோக்கமாகக்கொண்டு அல்ல எனவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தமது தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பாக உபவேந்தர்கள், பணிப்பாளர்கள் குழு ஆகியன வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் சம்மேளனம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ள தொடர் பணிப்புறக்கணிப்புடன் கூடிய தொழிற்சங்கப்போராட்டம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழு, உபவேந்தர்கள், பணிப்பாளர்கள் குழு விடுத்துள்ள அறிக்கை குறித்து சம்மேளனம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி நலனை கருத்திற்கொள்ளாது, விரிவுரையாளர்கள் தமது நலன்களை முன்னிலைப்படுத்தி, இந்த தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுப்பதாக அர்த்தப்படுத்த மேற்படி அதிகாரிகளின் அறிக்கைகள் அமைதிருப்பதாகவும் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தாம் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடுவது தனிப்பட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்டது அல்ல எனவும் முழு கல்வித்துறைக்காகவே தாம் இதனை மேற்கொள்ளவிருப்பதாகவும் விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

# மாணவர்களின் கல்விக்கு பாதிப்பை ஏற்படுத்தாதீர்

## - விரிவுரையாளரிடம் கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொள்ள திட்டமிட்டிருக்கும் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் உபவேந்தர்கள் குழு விசேட கோரிக்கை ஒன்றை விரிவுரையாளர்களிடம் முன்வைத்துள்ளது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் விரிவுரையாளர்கள் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என உபவேந்தர்கள் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

எதிர்வரும் நான்காம் திகதி தொடக்கம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்திருந்த நிலையில், உபவேந்தர்கள் குழு இந்தக்கோரிக்கையை முன்வைத்துள்ளது.

முன்னதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 21 நாட்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு இம்மாதம் 26 ஆம் திகதியே நிறைவுக்கு வந்தது.

இந்நிலையில் விரிவுரையாளர்களும் எதிர்வரும் நாட்களில் பகிஷ்கரிப்பினை மேற்கொள்ள உள்ளமையானது தமது கல்வி நடவடிக்கைகளில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# கடற்றொழில் உபகரணம் வழங்குமாறு முசலி மக்கள் மகஜர் கையளிப்பு

யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து மீண்டும் மீள் குடியமர்ந்துள்ள முள்ளிக்குளம் மக்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக முசலி பிரதேசப் பிரஜைகள் குழு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளதாக முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் எ.சுனேஸ் சோசை தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சார்பாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அவர்களிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 07-09-2007 அன்று யுத்தத்தின் காரணமாக முசலிர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அந்த மக்கள் முள்ளிக்குளம் கிராமத்திலிருந்து வெளியேறிய போது அங்கிருந்த இராணுவத்தினர் அவர்களது உடைமைகள் எதனையும் கொண்டு செல்ல அனுமதிக்காததோடு, இடம்பெயர்ந்து சென்று 3 நாட்களில் திரும்பி வருவீர்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனால் மீன் பிடிப் படகுகள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் பாதுகாப்பாக வைத்து விட்டுச் செல்லுங்கள் என இராணுவத்தினர் அம்மக்களிடம் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் அந்த மக்கள் தமது உடைமைகள் அனைத்தையும் வைத்து விட்டு அங்கிருந்து பல கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று முருங்கன் பாடசாலையில் தஞ்சமடைந்தனர்.

பின் அங்கிருந்து தாழ்வுபாடு, வாழ்க்கைப் பெற்றான் கண்டல், சிலாவத்துறை, மன்னார் போன்ற இடங்களில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்தனர்.

இந்த மக்கள் எவ்வித தொழில் வாய்ப்புகளுமின்றி கடந்த 5 வருடங்களாக பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் இம்மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமத்தில் குடியமர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் இதுவரை பலனளிக்கவில்லை.

எனினும் இம் மக்கள் தமது வாழ்வைச் சீர் செய்து கொள்ள முள்ளிக்குளம் கிராமத்தை அண்டிய பெரிய குளம் பகுதியில் உள்ள காடுகளை அகற்றி கடந்த 15 நாட்களாக எவ்விதத் தொழி லுமின்றி சிரமத்தின் மத்தியில் தற்காலிகமாகக் குடியேறியுள்ளனர்.

அம்மக்களை கடற்றொழில் செய்வதற்கு அங்குள்ள கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அந்த மக்கள் தற்போது கடற்றொழிலையே நம்பியுளளனர். ஆனால், அந்த மக்கள் தொழில் செய்வதற்கான கடற்றொழில் உபகரணங்கள் எதுவும் இல்லாத நிலையில் உள்ளனர்.

முதலில் பதிவு செய்யப்பட்ட கண்ணாடி இழைப படகுகள் 40, பதிவு செய்யப்படாத கண்ணாடி இழைப் படகுகள் 35, தெப்பம் 60, படகு வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள் என்பன இடம பெயர்வதற்கு முன் மக்களிடம் இருந்துள்ளன.

எனவே இந்திய உதவித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ள மீன் பிடி உபகரணங்களில் முள்ளிக்குளம் மக்களுக்கு முதலிடம் அளித்து, அம்மக்களுக்கு வழங்கி அவர்களின் தொழில் வாய்ப்பை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தவும், மக்களின் மீள் குடியேற்றத்திற்கு அனைவரதும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என முசலிப் பிரதேச பிரஜைகள் குழு சார்பாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் முசலிப் பிரதேச செயலர், மன்னார் ஆயர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக் கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# 'குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம்' நூல் வெளியீட்டு நிகழ்வு

(பருத்தித்துறை)

சட்டத்தரணி சபாரவீந்திரனின் 4ஆவது சட்ட நூலான(பாதுகாப்பு) குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய க்லை மண்டபத்தில் அதிபர் கே.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரதமவிருந்தினராகவும், யாழ்.நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராசா சிறப்புவிருந்தினராகவும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். வரவேற்புரையை வாசுகிதிவ்வியநாதனும், ஆசியுரையை சட்டத்தரணி எஸ்.சிவனேசனும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை கனடாவைச் சேர்ந்த அமர்நாத் நிர்மலாவும், யாழ் போதனாவைத்தியசாலை வைத்தியர் செல்வி சர்மிலா வேதநாயகம் பிள்ளையும் பெறவுள்ளனர். (01)

# தமிழ் கலாசாரத்தையே அவமானப்படுத்தும் தமிழ் தீவிரவாதிகள்!

- சக்கரவர்த்தி



**எல்.ரீ.ரீ.ஈ சார்பான தமிழ் தீவிரவாதிகளிடம் அடுத்து மாட்டிக் கொண்டவர் தமிழ், ஹிந்தி படங்களில் நடித்துவரும் பாவப்பட்ட மலையாளியான அசின். சமஸ்கிருத மொழியில் அசின் என்பதன் கருத்து தூய்மை என்பதாகும். அவருடைய இலங்கை விஜயத்துக்கு எதிராக தமிழ்நாடு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதுடன், அவர் அனுசரிக்க மறுத்தால் அவரை விலக்கி வைக்க வேண்டும் என்று கோரினார்கள். அவர் குழப்பமடைந்தார். தனது ஒப்பந்தப் பிரகாரம் தயாரிப்பாளர் கூறுமிடத்துக்கு தான் செல்லவேண்டி இருப்பதாகவும் இல்லையெனில் தான் நீதிமன்ற வழக்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் திரைப்பட சங்கத்தினரிடம் விளக்கமளித்தார். உண்மையில் சென்னைவாசிகளுக்கு இந்தச் சட்டப் பிரச்சினை பற்றி மிக நன்றாகத் தெரியும், ஆனால் அவர்கள் தங்கள் கண்டிப்பை தளர்த்திக் கொள்ளவில்லை.**

எல்லாப் பிரச்சினைகளும், இந்திய திரைப்பட சங்கத்தின், 11ஆவது சர்வதேச திரைப்பட விருது வழங்கும் (இ.்.ப்பா) நிகழ்ச்சி 2010ஆம் ஆண்டு ஜுன் 3 முதல் 5 வரை நடந்த போது ஆரம்பிக்கப்பட்டவைதான். அதன் அனுசரணையாளர்களுக்கு பாலிவூட் படவுலகு தொடர்பாகவோ அல்லது இந்திய அரசியல் பற்றியோ போதிய அறிவின்மையால் அது எதிர்பார்த்த விளைவைத் தராமல் மிக மோசமாக தோல்வி கண்டது.

இலங்கை அதிரடியாக ஒரு 126 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரவாகக் கிட்டும் என எதிர்பார்த்து ஒரு 9 மில்லியன் அமெரிக்க டொலர்களை தள்ளாட்டத்துடன் செலவிட தீர்மானிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சிலவேளைகளில் அவர்கள் நியூயோர்க்கில் நடத்தப்படும் ஜாக்பொட் சீட்டிழுப்பு போன்ற ஒன்றைப்போல இதனையும் எதிர்பார்த்திருக்கலாம்.

எல்.ரீ.ரீ.ஈ சார்பான சக்திகள் முன்னணி வகித்ததால் சென்னையே முதன்முதலாக இதைப்புறக்கணிக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. புலிகள் பகுதியினரின் குரல் தமிழ் திரைப்படத்துறையால் தயாரிக்கப்பட்ட தமிழ் படங்கள் இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்கு எதிராக எழுந்ததால், தமிழ்நாட்டு திரைப்பட உலகத்தினர் தமிழ் நட்சத்திரங்கள் இந்த விழாவில் பங்குபற்றுவதற்கு தடை விதித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். அதன் காரணமாக ரஜனிகாந்த், கமலஹாசன், விஜய், அஜித் மற்றும் சூர்யா போன்ற பிரபலமான முன்னணி நட்சத்திரங்கள் எந்தவகையிலும் இந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்வதற்கு மறுத்து விட்டார்கள்.

மிகவும் சுவராஸ்யமான விடயமாக, இராமாயண காவியத்தின் ஒரு தழுவலான ஐஸ்வர்யா, அபிஷேக் பச்சன், விக்ரம் போன்றோர் நடித்திருந்த ராவணண்எனும் படமும்இந்த 2010 திரைப்படவிழாவில் திரையிடுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும், அதன் தயாரிப்பாளர் மணிரத்னம் தனது படம் இன்னும் முடிவடையவில்லை என்றும், அதன் பின்னணி சேர்ப்பு வேலைகள் இடம் பெற்று வருவதாலும், தான் இ.்.ப்பா 2010இல் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்திருப்பதாகவும் கூறி தனது படம் திரையிடும் நிகழ்ச்சியை பின்வாங்கிக் கொண்டார்.

மெகா ஸ்டார் அமிதாப்பச்சன் கூட பிரச்சினைகளைச் சந்தித்தார். மும்பையில் உள்ள அவரது உல்லாச தங்கு விடுதியாகிய பிரத்திக்ஷா மாளிகையின் முன்பாக ஒரு குழுவினர் ஒரு எதிர்ப்பு பேரணியை மேடையேற்றினார்கள். அமிதாப் இலங்கைக்கு போவதற்கு சம்மதம் தெரிவித்தால் தாங்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இறுதியாக அமிதாப் குடும்பம் விழாவில் கலந்து கொள்வதில்லை என முடிவெடுத்தார்கள். அதேபோலவே ஷாருக்கானும் தீர்மானித்தார். அவர் வராததுக்கு காரணம் இதற்கு முன்பு கொழும்பில் அவரது நிகழ்ச்சி நடைபெற்றபோது அங்கு ஒரு குண்டுவீச்சு இடம்பெற்றதால் திரும்பவும் இங்கு வருவதில்லை என அவர் சபதமெடுத்திருந்தார்.

எல்.ரீ.ரீ.ஈ சார்பான தமிழ் தீவிரவாதிகளிடம் அடுத்து மாட்டிக் கொண்டவர் தமிழ், ஹிந்தி படங்களில் நடித்துவரும் பாவப்பட்ட மலையாளியான அசின். சமஸ்கிருத மொழியில் அசின்என்பதன் கருத்து தூய்மை என்பதாகும். இலங்கையில் ஒருபகுதி படமாக்கப்படவிருக்கும் சல்மான்கானின் 'ரெடி' என்கிற படத்தின் கதாநாயகியும் அவர்தான்.

அவருடைய விஜயத்துக்கு எதிராக தமிழ்நாடு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதுடன், அவர் அனுசரிக்க மறுத்தால் அவரை விலக்கி வைக்க வேண்டும் என்று கோரினார்கள். அவர் குழப்பமடைந்தார். அவர் விஜய் உடன் நடித்திருந்த காவலன் என்கிற படம் வெளிவரும் நிலையிலிருந்தது, மற்றும் தமிழ்நாட்டில் அவரது தொழில் ஆட்டங்காணும் நிலையிலிருந்தது. தனது ஒப்பந்தப் பிரகாரம் தயாரிப்பாளர் கூறுமிடத்துக்கு தான் செல்லவேண்டி இருப்பதாகவும் இல்லையெனில் தான் நீதிமன்ற வழக்கை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்று அவர் திரைப்பட சங்கத்தினரிடம் விளக்கமளித்தார்.

உண்மையில் சென்னைவாசிகளுக்கு இந்தச் சட்டப் பிரச்சினை பற்றி மிக நன்றாகத் தெரியும், ஆனால் அவர்கள் தங்கள் கண்டிப்பை தளர்த்திக் கொள்ளவில்லை. அவர் தனது விஜயத்தை மேற்கொண்டார். வாங்குபவர்கள் இல்லாமல் காவலன் தடுமாறினான். அது பல சிக்கல்களை எதிர்கொண்டு இறுதியாக2011 ஜனவரி 15இல் வெளியானது. தமிழ் திரைப்படத் துறையான கோலிவூட்டில் அதன்பின் அசின் தீண்டத்தகாதவராக மாறினார். சமீபத்தில் ஒரு தயாரிப்பாளர்அவரை விஜயுடன் நடிக்கவைக்கஒப்பந்தம் செய்ய முயற்சித்தார், ஆனால் அதற்கு எதிர்ப்புகள் எழுந்ததால் அது கைவிடப்பட்டது. அது சரியானதா? அது விவாதிக்கப்பட வேண்டியது. தமிழ்நாட்டு திரைப்பட கலைஞர்கள் சங்கம் தமிழ் கலைஞர்கள் இலங்கைக்குவருவதை தடை செய்கிறது. ஆனால் அதே நடிகர்களை செலுலோயிட் பிம்பங்களாக திரையில் தெரிவதற்கு அனுமதிக்கிறது. என்ன வேடிக்கை பாருங்கள்?

தமிழ் திரைப்பட உலகம், இலங்கையுடனான தனது தொடர்புகளை முற்றாக அறுத்துக் கொள்வதுதான் பிரச்சினை என்றால், முதற்காரியமாக அவர்கள் தமிழ்ப்படங்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும். அவர்கள் அதைச் செய்வார்களா? இல்லை ஒருபோதும்அதைச் செய்ய மாட்டார்கள், அது அவர்களது வருமானத்தைப் பாதிக்கும். தென்னாபிரிக்கா நிறவெறிக்கு உட்பட்டிருந்த போது இந்திய திரைப்படங்கள் அங்கு ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தது.

இந்த நாட்களில் ஈழம் சார்பானவர்கள் இலங்கைக்கு எதிரான எந்த விடயத்தையும் மற்றும் எல்லா விடயத்தையும் எதிர்க்கிறார்கள். ஒரு செய்தித் துணுக்கில் தமிழ்நாட்டு தமிழ் கல்விமான்கள் இலங்கை சென்று கவி பாரதியாரின் கொண்டாட்டங்களில் பங்குபற்றுவதைகூட அவர்கள் எதிர்க்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது இலங்கை அரசாங்கத்துடன் ஏதாவது தொடர்பினைக் கொண்டிருக்கிறதா? இல்லை. இது ஒரு தூய தமிழ் நிகழ்வு. தமிழருக்காக தமிழர்களினால் மற்றும் தமிழர்கள் சேர்ந்து நடத்தும் ஒரு நிகழ்ச்சி.

இதற்கும் மேலாக, ஆரவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு - தூத்துக்குடி படகுசேவை இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒருமைப்பாட்டுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் அடையாளமாக இந்த குழுவினர் ஆவேசமாக எதிர்த்ததால் இப்போது கவிழும் நிலைக்கு வந்துவிட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஒருமைப்பாடு எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை? இரு கரைககளிலிருந்தும் பயணம் செய்பவர்களில் 95 விகிதமானவர்கள் தமிழ் பேசும் மக்களே.

தமிழ்நாடு அகதி முகாம்களில் உள்ள இலங்கை அகதிகள்கூட, நாடு திரும்புவதற்கு இந்த சேவையை பயன்படுத்த தொடங்கியிருந்தார்கள். பெரிதாக குரலெழுப்பும் மதிப்புக்குரிய தமிழ்நாட்டு முதலமைச்சர்கூட, இதனால் பெரிதும் பயனடைவது தனது மாநிலம்தான் என்பதையும் குறிப்பாக துறைமுக நகரங்கள்கூட அவரது நிதியுதவியின்றி பெரிதும் அபிவிருத்தி அடையும் என்பதையும் உணரத் தவறிவிட்டார்கள். படகுச் சேவைக்காக மக்கள் இன்னமும் ஏங்குகிறார்கள்.

கிட்டத்தட்ட தினசரி ஐந்து விமான சேவைகள் இலங்கைக்கும் மற்றும் இந்தியாவுக்கும் இடையே நடத்தப்படுகின்றன. அவைகள் பறப்பதை அவர்களால் நிறுத்த முடியுமா? தினசரி தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே அநேக சிறிய படகுகள் சரக்குகளை ஏற்றி இறக்குகின்றன. அதை அவர்களால் நிறுத்தமுடியுமா?

மிகவும் இழிவான செய்கை என்னவென்றால் கடவுளை வழிபடுவதை தடுப்பதுதான். ஒரு இந்துவுக்கு, ராமேஸ்வரமோ அல்லது ராவல்பிண்டியோ அல்லது அங்கூரிலோ அல்லது அயோத்தியிலோ உலகின் எந்தப் பாகத்திலிருக்கும் ஒரு இந்து ஆலயத்துக்கு சென்று வழிபடும் உரிமை உள்ளது.

புனித மக்காவின் மேற்பார்வையாளராக சவுதி அரேபியா உள்ளது. ஈரானுடன் அவர்களுக்குள்ள உராய்வு உலகறிந்தது. ஆனால் ஈரானிய யாத்திரிகர்களை அவர்கள் தடுப்பதில்லை, ஈரான் முறுகல்களை ஏற்படுத்திய காலத்தில்கூட அவர்கள் யாத்திரிகர்களை தடுத்ததில்லை.

ஒரு எதிரி வீட்டுக்கு வந்தால்கூட அவரை வரவேற்பதுதான் தமிழர்களின் கலாசாரம். குமார் நடேசன் ராஜபக்ஷக்களின் இரத்த உறவினர் அல்ல. அவரது விருப்பப்படி ஒரு பெண்ணை தெரிந்தெடுப்பது அவரின் உரிமை. அவர் எந்த முக்கிய பிரமுகரையும் தேடி வரவில்லை, ஆனால் கடவுளை தேடி வந்தார். இரு நாடுகளும் ஒரு இராஜதந்திரஉறவை பாராமரித்து வருகையில், இந்தியன் குற்றவியல் நீதிமன்றத்தின் எத்தனையாம் இலக்க சட்டப்படி அவர் தடுக்கப்பட்டார் அல்லது ஏனைய முக்கிய பிரமுகர்கள் நாடு திரும்பும்படி கட்டாயப்படுத்தப் பட்டனர்?

இலங்கை விடயம் திவாலான அரசியல்வாதிகளின் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தும் ஒருமூலப் பொருளாக உள்ளது. இத்தகைய அரசியல்வாதிகள் இலங்கை அகதிகள் விடயத்திலோ அல்லது தங்கள் உள்நாட்டு விவகாரங்களிலோ சிறிதளவேனும் அக்கறை காட்டாதவர்கள். அவர்கள் கட்சிக் கொடிகளை வைத்துக்கொண்டு இலங்கையிலிருந்து வருபவர்களை அவமானப் படுத்துகிறார்கள், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த தமிழ் கலாசாரத்தையே அவமானப்படுத்துகிறோம் என்பதை ஒருபோதும் உணருவதில்லை.





# மனித உரிமை விடயத்தில் தலையிட வெளிச்சக்திகளுக்கு இடமில்லை

## அரசு திட்டவட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்களில் வெளிச்சக்திகளின் தலையீட்டுக்கு அனுமதியில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எந்தவொரு நாட்டின் மனித உரிமை விவகாரங்களிலும் வெளிச சக்திகள் தலையீடு செய்வதனை அனுமதிக்க முடியாது என சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 20ஆம் அமர்வுகளில் கலந்து கொண்டுள்ள இலங்கை இதனைச் சுட்டிக்காட டியுள்ளது.

ஒத்துழைப்பு, யதார்த்தமான பேச்சுவார்த்தை ஆகிய இரண்டு அடிப்படைக் கொள்கைகளின் ஊடாகவே எந்தவொரு நாட்டின் மனித உரிமைப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

நாடுகளின் விருப்பு வெறுப்பிற்கு மனித உரிமைப் பேரவை கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பக்கச்சார்பான முறையில் குறிப்பிட்ட சில நாடுகளுக்கு எதிராக மட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றுதல் மற்றும் விவாதம் நடாத்துதல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்தி நாடுகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டு வரப்படும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

# நுளம்பு எனது காலடியில் வீழ்ந்து வணங்கியது



தான் அண்மையில் சுகவீனமடைந்திருந்ததாகவும் அதேவேளை, பயங்கர நுளம்பு ஒன்று தனது காலடியில் வீழ்ந்து வணங்கியதாகவும் பொதுமக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் வேண்டுகோளைத் தொடர்ந்து கிரிபத் கொட மாவட்ட வைத்தியசாலைக்கு மேல் மாகாணசபையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட அம்பியூலன்ஸ் வண்டி ஒன்று கையளிக்கும் வைபவம் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"அண்மையில் நான் சுகவீனமுற்றிருந்தேன். சிலர் என்னால் இனி நடமாட முடியாது என் கூறித் திரிந்தனர். ஆனால் அது உண்மை அல்ல. எனது இரத்தத்தில் பிரச்சின்ை காணப்பட்டது. ஆனால் நான் சுகமடைந்துவிட்டேன். இறுதியாக பயங்கரமாக நுளம்பு ஒன்று காலடியில் வீழ்ந்து வணங்கியது.

அண்மையில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து பலர் கல்வி அமைச்சரும் உயர் கல்வி அமைச்சரும் பதவி விலக வேண்டும் என கோருகின்றனர். அரசாங்கத்துக்கு வாக்களித்தவர்களுக்காக இவ்வாறு கேட்கும் உரிமை இல்லை. நீதிமன்றம் தனது நடுநிலையான தீர்ப்பை வழங்கியுள்ளது இது நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதை காட்டுகின்றது. இது ஐ.தே.க. காலத்தில் நடந்திருந்தால் நீதிபதிகளின் வீடுகளுக்கு கற்கள் வீசப்பட்டிருக்கும். ஜனாதிபதி இந்த நாட்டை ஜனநாயக முறையில் ஆட்சி செய்கின்றார். இதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்

# பொதுவான எதிர்க்கட்சியின் அவசியம் எழுந்துள்ளது

## - என்கிறார் கருஜயசூரிய

(கொழும்பு)

பொதுவான எதிர்க்கட்சி ஒன்றின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டுமாயின் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

இந்த சிக்கல்களிலிருந்து மக்களை திசை திருப்பும் நோக்கில் அரசாங்கம் அவசரமாக தேர்தல்களை நடாத்துகின்றது.

18ஆம் திருத்தச் சட்ட மூலம் அமுலில் இருக்கும் வரையில் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. போலியான முறையில் தேர்தல்களில் வெற்றியீட்டி அதன் மூலம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதே அரசாங்கத்தின் திட்டம் ஆகும். பெருமளவிலான மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் தருணத்தில்அரசாங்கம் பொதுமக்கள் பணத்தை விரயம் செய்து வருகின்றது என்றார்.



கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் அரச ஓவிய, சிற்பக் கண்காட்சி, நேற்று முன்தினம் கொழும்பு கலாபவனத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் அரசியல் முக்கியஸ்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டு சிற்பக் கண்காட்சியை பார்வையிடுவதைக் காணலாம்

# சம்பந்தனின் உரை குறித்து இந்திய பிரதமருக்கு முறையீடு


(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் ஆற்றிய உரை குறித்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஜாதிக ஹெல உறுமய கடிதமொன்றில குறிப்பிட்டுள்ளது. அக்கட்சியின் தலைவர் வண. ஓமல்பே சோபித்த தேரர் எழுதிய இக்கடிதம், கொழுமபிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கையளிக்கப் பட்டுள்ளது.

''தமிழர்களுக்கான தனி நாட்டை அடைவதற்காக நேரடி நடவடிக்கையில் தாம் ஈடுபடக் கூடும் என குறிப்பிட்டு, தமிழ் தேசிய' கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் ஆற்றிய உரையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த உரையானது கோபமேற்படுத்துவதும், ஆத்திரமூட்டுவதும் தேசத் துரோகமானதுமாகும் என்பதையும், மூன்று தசாப்த கால யுத்தத்திலிருந்து மெதுவாகவும் உறுதியாகவும் நாங்கள் மீளெழும் போது அனைத்து வகையான இனக் குரோதத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது என்பதையும் நீங்கள் சந்தேகமின்றி ஏற்றுக் கொள்வீர்கள் என வண. சோபித தேரர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்திரமூட்டல் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய மௌனமாகவும் பதிலளிக்காமலும் இருக்க முடியாது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். கருணாநிதி, தமிழீழ ஆதரவு இயக்கம் எனும் அமைப்பின் சார்பில் இந்தியாவில் ஓகஸ்ட் 5 ஆம் திகதி மாநாடொன்றை நடத்தவுள்ளதாக நாம் அறிகிறோம். தமிழர்களுக்கு தனியான தாயகம் அமைக்கப் பட வேண்டுமென பிரகடனப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. துன்பமான சம்பவங்களுக்கும் பயங்கரவாத யுத்தத்திற்கு வழிவகுத்த, தனி நாடு அமைப்பதற்கான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1976 ஆம் ஆண்டு தீர்மானத்தை நாம் நினைவுகூருகிறோம்.



எமது மண்ணில் இந்திய எதிர்ப்பு செயற்பாடுகளை நாம் எப்போதும் அனுமதிக்கவில்லை என்பதை நீங்கள் நினைவு கூர்வீர்கள் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம். நட்பு நாடு என்ற அடிப்படையில் அத்தகைய நடவடிக்கைள் இடம் பெறுவதை நாம் எப்போதும் அனுமதிக்கமாட்டோம்" என அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மண்ணில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை எந்த கட்சியும் மேற்கொள்வதை தடுக்குமாறும் இந்திய பிரதமரை ஜாதிக ஹெல உறுமய தலைவர் கோரியுள்ளார்.

# இசட் புள்ளியால் அநீதி எனில் மாணவர்களுக்கு தீர்வு வேண்டும்

## - கூறுகிறார் அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

கடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவிற்கான இசட் புள்ளி மாற்றத்தால் பரீட்சார்த்திகளுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அதற்கு உடன் நிவாரணம் காணப்பட வேண்டும். என்பதே தமது நிலைப்பாடாகும் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கும் உயர் கல்வி அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்காவிற்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்று அமைச்சர் மேலும் கூறினார்.

# முதலமைச்சர் வேட்பாளர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள்

## திட்டமிடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

கலைக்கப்பட்டுள்ள வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் முதலமைச்சர் வேட்பாளராக இராணுவத்தில் பணியாற்றிய முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகள் சிலரைக் களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாக அந்தக கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓய்வுபெற்ற இந்த இராணுவ அதிகாரிகள் சிலருடன் ஐ.தே.கவின் உயர்மட்டம் இரகசியக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத்தவிர பல்வேறு துறைகளில் பிரபல்யமானவர்கள் சிலரையும் தேர்தலில் களமிறக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

இதுகுறித்து கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்

முதலமைச்சர் வேட்பாளர்கள் குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. எதிர்வரும் மாகாண சபைதேர்தல்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தற்போது பேசப் பட்டுவருகிறது. இதற்கான இறுதி முடிவுகள் குறித்து கட்சியின் செயற்குழு கூடி தீர்மானிக்கும். செயற்குழு எதிர்வரும் 05ஆம் திகதி கூடவுள்ளது.

நடத்தப்படவுள்ள மாகாண சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட விரும்புகின்றவர்கள் ஜுலை 05ஆம் திகதி வரை கட்சித் தலைமையகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்றார்.

# அடிப்படை வசதிகளின்றிய ஆதிபராசக்தி முன்பள்ளி

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கோம்பாவில் 4 ஆம் வட்டாரத்தில் இயங்கும் ஆதிபராசக்தி முன்பள்ளி அடிப்படை வசதிகளின்றி மிகவும் பின்தங்கிய நிலையில் இயங்கி வருகின்றது.

36 மாணவர்கள் இம்முன்பள்ளியில் கல்வி பயின்று வரும் நிலையில், போதிய இட வசதிகள் இன்றி மாணவர்கள் சிரமத்துடனேயே கல்வி கற்கின்றனர்.

இம்முன்பள்ளிக்கென நிரந்தர காணி இருக்கின்ற போதிலும் அது மிகவும் குறைவான பரப்பளவாகவும் அதில் சிறிய கட்டடம் அமைக்கப்பட்டே தளபாடங்கள் வைப்பதற்கு இடமில்லாத நிலையில் நெருக்கடியின் மத்தியில் இயங்கி வருகின்றது.

இம்முன்பள்ளியில் விளையாட்டு முற்றம், விளையாட்டு உபகரணங்கள், மலசலகூட வசதிகள் மற்றும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான வழிமுறைகள் எதுவும் இல்லாத நிலையும் காணப்படுவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து மீள்குடியேறி சுமுகமான நிலையில் வாழ்ந்து வரும் பிள்ளைகளின் ஆரம்பக்கல்வி சீராக இடம்பெற்று வரும் நிலையில் அவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றும் வகையில் சம்பந்தப்பட்டவர்கள் இம்முன்பள்ளியின் அடிப்படை வசதிகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)



அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் வில்லு மண்டப கட்டடப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. எதிர் வரும் பெருந்திருவிழாவை முன்னிட்டு துரித கதியில் இடம் பெற்றுவரும மண்டப கட்டடப்பணிகளை காணலாம். (10)

## நன்றி வழிபாடு

(பருத்தித்துறை)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 198 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், நன்றி தெரிவிக்கும் வழிபாடும் இன்று காலை 9.00 மணிக்கு கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சேகர முதன்மைக் குழு அருட்திரு எஸ்.டபிள்யூ. தேவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவர் அருட்திரு.வர்ணகுலசூரிய சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (01)

## அப்பூதியடிகள் நாயனார் புராணக் கருத்தரங்கு


பெரிய புராணத்தில் அப்பூதியடிகள் நாயனார் பற்றிய கருத்தரங்கும் கலந்துரையாடலும் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் வழங்குவர்.

"அப்பூதியடிகணாயனார் புராணக் கட்டமைப்பு" என்ற பொருளில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை முதல்நிலை விரிவுரையாளர் செல்வஅம்பிகை நந்தகுமாரனும் அப்பூதியடிகணாயனார் புராணம் காட்டும் விருந்தோம்பல் என்ற தலைப்பில் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரனும் கருத்துரைகளை வழங்குவர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், விரிவுரையாளர் ச.லலீசன், கொக்குவில் இந்துக் கல்லூரித் தமிழாசிரியர் எஸ். சந்திரசேகர் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

இளையோரின் சமய நம்பிக்கைகளை உயர்த்தும் விதத்திலும் சமய இலக்கியங்களை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் திறனை வளர்க்கும் நோக்குடனும் இக்கருத்தரங்கு முன்னெடுக்கப்படுவதாகவும் ஆர்வமுள்ள எவரும் இதில் பங்கேற்றுப் பயன்பெறலாம் எனவும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)

## பரமர் சங்கமம்



"பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை" எண்டுசொல்லுவினம். இதுபோலத் தான் சில காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கு.

ஆனை வருகுது, குதிரை வருகுதெண்டு அட்டட்டாடை மட்டக்கிளப்பெண்பினம். பிறகு பாத்தா ஒண்டும் நடக்காது. அதுக்குத்தான் பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை எண்டும் சொல்லுறே!

யாழ்.போதனாவைத்தியசாலை முப்பதாண்டு கவனிப்பாரற்ற நிலைக்குப் பின்னால் இப்பதான் பல வசதிகளைக் கொண்ட நவீன வைத்தியசாலையாகச் சிறுகச் சிறுக முன்னேறிக்கொண்டிருக்கு.

இப்பொழுதும் மாடிக்கட்டடமொன்று துரித கதியில் கட்டப்பட்டு வேலைகள் முடியுந்தறுவாயை அடைந்துள்ளது. இதுக்கு முன்பாகவும் நான்குமாடி கட்டடம் கட்டி அதனிலும் வைத்திய சேவைகளை மேற்கொள்ளும் நோயாளர் விடுதிகள் இயங்கி வருகின்றன.

கீழ்தளத்தில் இருந்து கடைசித் தளத்திற்கு செல்வதானால் 72 படிகளை ஏறித்தான் சென்றடைய வேண்டும். நோயாளிகள் சிலரும் இவற்றில் ஏறி இறங்கித்தான் வைத்திய சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

தர்மாஸ்பத்திரி எண்டால் சும்மாதானே வைத்தியம் பெறுகிற எண்ட இளக்காரமோ. வருசங்கள் மூண்டைத்தாண்டியும் அந்த நான்கு மாடி வைத்திய விடுதிகளுக்கு "லிப்ற்" என்னும் மின் இயந்திரம் இன்னமும் பொருத்தப்படாமல் இருந்து வருகிறது.

அதற்கான "லிப்ற்" ரைப் பொருத்துவதற்கான பணம் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டும் ஓராண்டைத் தாண்டி விட்டதாகத் தகவல். இதனிடையே நாளாந்தம் எழுந்த நடக்க முடியாத நோயாளர்களை எக்ஸ்ரே மற்றும் சத்திர சிகிச்சை என்றில்லாமல் இருதயப்பரிசோதனை போன்ற இன்னோரன்ன தேவைகளுக்காக பலதடவைகள் அந்தந்தப் பிரிவுகளுக்கு சிற்றூழியர்கள் கைத்தாங்கியிலேயே தூக்கிப் படிகளைத் தாண்ட வேண்டி ஏற்படுகிறது.

இவ்வேளைகளில் பல விபத்துகள் ஏற்பட்டு நோயாளர் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை சிற்றூழியர் ஒருவர் வீழ்ந்து முள்ளந்தண்டில் ஏற்பட்ட உபாதையால் இன்றைக்கும் அனுபவித்துக் கொண்டிருப்பதாக அறியமுடிகிறது.

முள்ளந்தண்டில் ஏற்பட்ட முறிவை கொழும்பு தனியார் வைத்தியசாலைக்குச் சென்று 5 இலட்சம் ரூபா வரை செலவு செய்து வைத்தியம் பார்த்தும் இன்னமும் அந்த உபாதையில் இருந்து அந்தச் சிற்றூழியர் விடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுக்கிடேல்ல கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒரு பெண் நோயாளியை ஸ்கான் செய்ய எடுத்துச்சென்று மீள விடுதிக்கு படிக்கட்டுகளில் ஊழியர்கள் தூக்கிச்செல்கையில் ஊழியர் ஒருவர் தடுக்கி விழுந்ததால் அந்நோயாளியும் தூக்கி வீசப்பட்டு மண்டை உடைந்ததாகச் செய்திகளைப் படிக்க நேர்ந்தது.

ஒருவருடத்திற்கு முன்பாக "லிப்ற்" ரை அமைப்பதற்கு 81 இலட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்ட மின்சார சபை இன்னமும் யாருக்குப் பேன் பொறுக்கிக் கொண்டிருக்கு?

அந்த நான்கு மாடியில் இயங்கும் 12 விடுதிகளையும் சேர்ந்த நோயாளிகள் எண்டில்லாமல் இன்னமும் இரண்டொரு மாதங்களில் திறந்து வைக்கப்படவுள்ள புதிய நான்கு மாடிக் கட்டடத் தொகுதி விடுதிகளையும் சேர்ந்த நோயாளர்களையும் காப்பாற்ற ஆரம்பித்து வைக்க முன்னாலே "லிப்ற்" வசதிகள் செய்யப்படுமா என்ன...

உந்த ஆள்தூக்கிகள் வருமுன்னாலை ஆக்களையெல்லே விபத்துகள் தூக்கிக் கொண்டு போயிடும்போல கிடக்கு... இல்லையே பின்னை...

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாதனை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழாவிற்குரிய கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அடியார்களின் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 40.07. 2012 புதன் கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.04 தொடக்கம் 10.43 வரையான காலப்பகுதியில் நடை பெறவுள்ளது. (62)

## அதிகம் விற்பனையாகும் பச்சை மிளகாய்

(வரணி)

கொடிகாமம் பொதுச்சந்தையில் தற்போது பச்சைமிளகாய்க்கு அதிக வரவேற்பு காணப்படுகிறது.

ஊறுகாய், வற்றல் போடுவதற்காக பொதுமக்கள் மிளகாயைக் கூடுதலாக வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் இச்சந்தையில் தற்போது 1 கிலோ மிளகாய் 250 ரூபாவாகவும் சில்லறை வியாபாரத்திற்கு 100 கிராம் 30 ரூபாவாகவும் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. (150)

## மாணவர்களுக்கு பேரீச்சைப் பழங்கள்

(வரணி)

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் கடந்த புதன்கிழமை 2 கிலோ நிறையுடைய பேரீச்சைப்பழங்கள் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை மதிய உணவுத்திட்டத்தின் கீழ் சகல பாடசாலை மாணவர்களுக்கும் பேரீட்சைப்பழங்கள் விநியோகம இடம்பெற்றுவருகிறது.

இந்த வகையில் இப்பாடசாலையில் கல்விபயிலும் தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கு இப்பேரீட்சைப்பழங்கள் வழங்கப்பட்டுள்ளன. (150)

## முரசின் இன்றைய பலன்

(30.06.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 16 ஆம் திகதி. ஏகாதசி பிற்பகல் 10.06 வரை. நட்சத்திரம் விசாகம் முன்னிரவு 9.26 வரை. சித்தயோகம். சயன ஏகாதசி விரதம். இராகுகாலம் 08.56 - 10.26 வரை. சுபநேரம் 2.56 - 4.26 வரை. எமகண்டம் 1.26 - 2.56 வரை. குளிகைகாலம் 5.56 - 7.26 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெற்றிவாய்ப்பு, உறவினரால் தொல்லை, பிரிவுகளுக்கு இடமுண்டு, புத்திரரால் கவலை. |
| ரிஷபம் | சௌபாக்கியம், செலவுகள் அதிகரிப்பு, முன்னேற்றம் தடைப்படும், கடின உழைப்பு. |
| மிதுனம் | கவனம் தேவை, பாராட்டுக் கிடைக்கும், நீண்ட கால ஆசைகள் நிறைவேறும், பஞ்சமில்லை. |
| கடகம் | எதிர்ப்புகள், தொழில் துறையில் பிழைப்பு, சகோதரர் உதவி, பிரயாண அனுகூலம். |
| சிம்மம் | நல்ல தகவல், குடும்பத்திர் சுப காரியம், மறைமுக எதிர்ப்புகள், ஆசைகள் நிறைவேறும். |
| கன்னி | இறைபக்தி, தொழிலில் சாதனை, பிரயாணத்தில் சுகம், ஸ்தல யாத்திரைகள். |
| துலாம் | கவனம்தேவை, பிரச்சினைகளை சமாளிப்பீர், குடும்ப உறவில் திருப்தி, வெளியூர் பயணம். |
| விருச்சிகம் | ஆதரவு, செல்வ வளம் உயரும், திருமண பிரஸ்தம், காரியனுகூலம். |
| தனுசு | வாழ்க்கையில் கஷ்டம், அன்னியர் குறுக்கீடு, சாராளமான பணப்புழக்கம், இடமாற்றம். |
| மகரம் | புகழ்ச்சி, குடும்பத்தில் அதிருப்தி, தொழில் விருத்தி, உல்லாச பயணம். |
| கும்பம் | பெரியோர் ஆசி, கடன்பட நேரிடும், அலைச்சல் மிகுதி, இரட்டிப்பு செலவு. |
| மீனம் | அரசாங்க உதவி, ஆன்மீக ஈடுபாடு, தொழில் வளம் பெருகும், உடல் நலனில் கவனம். |

## பெக்காமிற்கு கல்தா

(லண்டன்)

ஒலிம்பிக் கால்பந்தாட்ட அணித் தேர்வில் இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் நீக்கப்பட்டுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான இங்கிலாந்து கால்பந்து அணியில் தனக்கு இடம் கிடைக்கும் என்று முன்னாள் கப்டன் 37 வயதான டேவிட் பெக்காம் கனவு கண்டு கொண்டிருந்தார்.

அணியில் தனக்கு இடம் கிடைக்காதது பற்றி பேசிய பெக்காம், அணியில் வாய்ப்பு கிடைக்காதது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. ஆனால் அணிக்கு பலமாக என்னை விட வேறு யாரும் பெரிய அளவில் இருக்க முடியாது என்று தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்து கால்பந்து அணியின் நட்சத்திர வீரராக திகழ்ந்த பெக்காமையே அந்த அணி சார்ந்திருந்தது. லண்டனில் பிறந்தவரான பெக்காம் இங்கிலாந்து அணிக்காக 115 சர்வதேச போட்டிகளில் விளையாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அணியின் வெற்றியே முக்கியம். அந்த வகையில் தற்போதைய ஆட்டத்திறன் அடிப்படையிலேயே அணித் தேர்வு இடம்பெற்றது. இதில் பெக்காம் அணியில் இணைக்கப்படாதது துரதிர்ஷ்டவசமானது என்றாலும், அவரை விட சிறந்த இளம் வீரர்கள் உள்ளனர் என்பதை நாம் மறுக்க முடியாது என இங்கிலாந்து கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# யூரோ கிண்ண கால்பந்து; இறுதியில் இத்தாலி

(வார்சா)

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் இரண்டாவது அரையிறுதியில் சிறப்பான அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி இத்தாலி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் மூன்று முறை சம்பியனான ஜேர்மனி அணி, மற்றொரு முன்னாள் சம்பியனான இத்தாலியுடன் மோதியது. இரசிகர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப இப்போட்டி முதலில் மிகவும் விறுவிறுப்பாக சென்று கொண்டிருந்தது.

ஆனால் திடீரென ஆட்டம் இத்தாலி வீரர் மரியா பலோடெலியின் கைக்கு சென்றது. ஆட்டத்தின் 20-ஆவது நிமிடத்தில் கசானோ கடத்திக் கொடுத்த பந்தை தலையால் முட்டி பலோடெலி அருமையான கோல் அடித்தார். அந்த அதிர்ச்சியிலிருந்து ஜேர்மனி வீரர்கள் மீள்வதற்குள், ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் அவர்களுக்கு அடுத்த அதிர்சியையும் பலோடெலி அளித்தார். இம்முறை களத்தில் பம்பரம் போல புயல் வேகத்தில் செயற்பட்ட பலோடெலி, பந்தை வெகுதூரத்திலிருந்து தனி ஆளாகக் கடத்தி கொண்டுவந்து, கம்பீரமாகக் கோல் அடித்தார்.

இவ்வாறு ஆட்டத்தின் ஆரம்பம் முதலே இத்தாலி அணியினரின் கை ஓங்க ஆரம்பித்தது. ஜேர்மனி அணியினரும் சிறப்பாக ஆடினர். அந்த அணியின் மரியோ கோமெஸ் போன்ற வீரர்கள் சிறப்பாகஆடினாலும்,அவர்களால் கோல் அடிக்க இயலாமல் போனது. முதல் பாதியின் முடிவில் இத்தாலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஆட்டத்தின்

இரண்டாவது பாதியிலாவது பதில் கோல் அடிக்க வேண்டுமென ஜேர்மனி வீரர்கள் மேலும் தீவிரம் காட்டினார். ஆனால் இத்தாலி அணியின் கப்டனும், கோல் கீப்பருமான கியான்லுகி பபன் சிறப்பாக செயற்பட்டு ஜேர்மனி வீரர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டார். இதனால் கோல் அடிப்பது ஜேர்மனி அணியினருக்கு எட்டாக்கனியாகவே இருந்தது.

90ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் ஓசில் தனக்கு கிடத்த பெனால்டி கிக் வாய்ப்பை பயன்படுத்தி கோல் அடித்தார். எனினும் கடைசி கட்டத்தில் அடிக்கப்பட்ட அந்த கோல் ஜேர்மனி அணிக்கு வெறும் ஆறுதலாகவே அமைந்தது.

ஆட்டத்தின் இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி இத்தாலி அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. நாளை நடக்கும் இறுதிப்போட்டியில் இத்தாலி அணி, ஸ்பெயினை எதிர்த்து விளையாடுகிறது.



## அதிர்ஷ்டம் இல்லாததே தோல்விக்கு காரணம்

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் சிறப்பாக எமது அணி ஆடியபோதும் அதிர்ஷ்டம் இல்லாததே தோல்விக்கு முக்கிய காரணம் என போர்த்துக்கல் அணி கப் டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்தார்.

எப்போதும் தண்ட உதை மூல முறையில் முதல், இரண்டு அல்லது மூன்றாவதாக வருவேன். இம்முறை ஐந்தாவது வாய்ப்பில் கோல் அடிக்க, நான் தான் சம்மதித்தேன். ஆனால், இரு வீரர்கள் ஏமாற்றினர். அதிர்ஷ்டம் இல்லாததால் தோல்வி கிடைத்தது. ஸ்பெயின் அணி இம்முறை கோப்பை வெல்லும் என நம்புகிறேன். ஏனெனில், எனது நண்பர்கள் அதிகம் இந்த அணியில் உள்ளனர் என்றார்.

## கூடைப்பந்து கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின்ஏற்பாட்டில் கூடைப்பந்தாட்டத்தில் புதிய தொழில்நுட்ப நடைமுறைகள் சம்பந்தமான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் செ.ரமணன் அறிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் கூடைப்பந்தாட்டத்தில் ஆர்வம் உள்ளவர்களும் கூடைப்பந்தாட்ட கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் கழக வீரர்களும் பாடசாலை வீரர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எஸ்.எல்.பி.எல். அணிகளின் ஏலம் இந்திய நிறுவனங்கள் ஆதிக்கம்

எஸ்.எல்.பி.எல். என அழைக்கப்படும் சிறிலங்கா பிறீமியர் லீக் அணிகளுக்கான உரிமையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதன்படி உரிமையாளர்களின் பட்டியலில் இலங்கையைச் சேர்ந்த எவரும் இல்லை என அறிய முடிகிறது.

7 அணிகளான வயம்ப, கந்துரட்ட, றுகுண, ஊவா, பஸ்னாஹிர, உத்துர, நகெனஹிர ஆகிய அணிகளுக்கான உரிமையாளர்களுக்கான ஏலங்களே இடம்பெற்ற நிலையில் இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளன.

இதில் அதிகபட்சத் தொகையான 5.02 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு வயம்ப அணி குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. மஹேல ஜெயவர்தனவை அடிப்படையாகக் கொண்ட இவ்வணி இலங்கையின் உள்ளூர் ருவென்ரி - 20 தொடர்களில் தொடர்ந்தும் பிரகாசித்து வரும் அணி என்பது குறிப்பிடத்தக்கது. வயம்ப அணியை இந்தியாவைச் சேர்ந்த வாதவன் ஹோல்ட்டிங்க்ஸ் தனியார் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது.

அடுத்த அதிகபட்சத் தொகையான 4.98 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு கந்துரட்ட அணி வாங்கப்பட்டுள்ளது. கந்துரட்ட அணியில் குமார் சங்கக்கார முக்கியமான வீரராகக் காணப்படுகிறார். தொடர்ந்து றுகுண அணி 4.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், ஊவா அணியும் அதே 4.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், பஸ்னாகிர அணி 4.33 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், உத்துர அணி 3.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், நகெனஹிர அணி ஆகக்குறைந்த தொகையான 3.22 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இதில் பஸ்னாஹிர அணியை இந்தியாவின் இரசிகர்களின் அமைப்பு ஒன்றே குத்தகைக்கு எடுத்துள்ளது. இந்தியன் கிரிக்கெட் டண்டி லிமிற்றட் என்ற இந்த அமைப்பு இந்தியக் கிரிக்கெட் வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். தற்போது அவ்வமைப்பு எஸ்.எல்.பி.எல்லில் ஓர் அணியை குத்தகைக்குப் பெற்றுள்ளது.

## மேன்முறையீடு தொடர்பில் கட்டாயப்படுத்தமாட்டோம்

(கோலாலம்பூர்)

நடுவரின் தீர்ப்பிற்கு மேன்முறையிடுவது செய்வது நாம் யாரையும் கட்டாயப்படுத்தப்போவதில்லை என ஐ.சி.சி.யின் புதிய தலைமைச் செயல் அதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் தெரிவித்தார்.

ஐ.சி.சி.யின் முடிவு எதிர்மறையானது என்று நினைக்கவில்லை. நிறைய தொடர்களில் இந்த முறை உபயோகப்படுத்தப்படுவதை நாங்கள் பார்ப்போம். ஆனால் இதனைப் பயன்படுத்தும்படி இந்தியா உட்பட யாரையும் கட்டாயப் படுத்துவதில் அர்த்தம் இல்லை. எந்த ஒரு செயலையும் செய்யும்படி கட்டாயப் படுத்துவது ஒருபோதும் நன்றாக இருக்காது. எனவே தங்களது தொடரில் இந்த முறையை பயன்படுத்துவது குறித்து இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.சி.சி.யின் தலைமை செயல் அதிகாரியாக கடந்த 4 ஆண்டுகளாக இருந்த ஹரூன் லார்கட்டின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து புதிய தலைமை செயல் அதிகாரியாக தென்னாபிரிக்க முன்னாள் வீரர் டேவ் ரிச்சர்ட்சன் நேற்று முன்தினம் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்ட பின் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



நடால்

## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடால் அதிர்ச்சித் தோல்வி

(லண்டன்)

விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் சுற்றின் இரண்டாவது ஆட்டத்துடன் இரண்டாம் நிலை வீரர் நடால் அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட முதல் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) மற்றும் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

இரண்டாவது சுற்றில் பல்கேரியாவின் ஸ்வெடனா பிரான்கோவாவுடன் மோதிய ஷரபோவா முதல் செட்டில் கடுமையாகப் போராடி 7,6 (7,2) என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் அபாரமாக விளையாடிய பிரான்கோவா 7,6 (7,2) என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுத்தார். ஆனால், 3ஆவது செட்டில் தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய ஷரபோவா, பிரான்கோவாவின் சேர்வீஸ்களை எளிதில் முறியடித்து புள்ளிகளைக் குவித்தார். இறுதியில் ஷரபோவா 7,6 (7,2), 6,7 (2,7), 6,0 என்ற செட் கணக்கில் வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 2ஆவது சுற்று போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6,1, 6,4 என்ற நேர் செட்களில் ஹங்கேரி வீராங்கனை மெலிண்டா ஸிங்க்கை வீழ்த்தினார். ராபர்டா வின்சி, சாரா எர்ரானி(இத்தாலி) ஆகியோரும் 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சேவியர் மலிசே (பெல்ஜியம்), ரேடக் ஸ்டெபானக் (செக்.), பிரையன் பேக்கர் (அமெரிக்கா), வெர்டாஸ்கோ (ஸ்பெயின்) காபின் (பெல்ஜியம்), நிஷிகோரி (ஜப்பான்) ஆகியோர் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

அதேவேளை, உலகின் 2ஆம் நிலை வீரர் ரபேல் நடால் இரண்டாம் சுற்றுடன் வெளியேற்றப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் அவர் பெரிதும் அறியப்படாத செக் குடியரசு வீரரிடம் தோல்வியடைந்தார்.

100ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள செக் குடியரசு வீரரான லூக்காஸ் ரொஸொலிற்கும், உலகின் இரண்டாம் நிலை வீரரும் அண்மையில் பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் தொடரை வெற்றி கொண்டவருமான ரபேல் நடாலிற்குமிடையில் இடம்பெற்ற இப்போட்டியில் லூக்காஸ் ரொஸொல் 6-7, 6-4, 6-4, 2-6, 6-4 என்ற செட் அடிப்படையில் வெற்றி கொண்டார்.



படப்பிடிப்பு : சுரேஷ்

# 13 வயதுப் பிரிவுப் பெண்கள் கால்பந்து தெல்லிப்பளை மகாஜனா சம்பியன்

(யாழ்ப்பாணம்)

சமபோஷ நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பாடசாலைககளின் 13 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி சம்பியனானது.

இக்கால்பந்தாட்டப் போட்டித் தொடர் கடந்த 23, 24ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், குளமங்கால் றோமல் கத்தோலிப் பாடசாலை அணியும் மோதவிருந்தது. இப்போட்டியில் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி சமூகமளிக்காதமையால் மகாஜனாக் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் மகாஜனாக் கல்லூரி அணி இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். சென். ஜேம்ஸ் பாடசாலை அணியும், இளவாலை புனித கன்னியர் மட பெண்கள் பாடசாலை அணியும் மோதின. இதில் இளவாலை புனித கன்னியர் மட பெண்கள் பாடசாலை அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், இளவாலை புனித கன்னியர் மட பெண்கள் பாடசாலை அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

இதேவேளை, அடுத்த மாதம் திருகோணமலையில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிக்குத் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20,93)

## விளையாட்டுச் செய்திகள்

## கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'பி' பிரிவுக்கான ஆட்டம் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில்நடைபெறவுள்ள இப்போட்டித் தொடர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆண்கள் பிரிவுக்கான போட்டி 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இதில் 'ஏ' பிரிவுக்கான ஆட்டம் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (118)

# வடமாகாண வலைப்பந்தாட்டம் சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வடமாகாண சம்பயினாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இப்போட்டி முடிவுகள் தொடர்பில் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவிக்கையில்,

17 வயதுக்குட்பட்டோர்:

முதலாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி வித்தியாலயம், மூன்றாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரி.

15 வயதுக்குட்பட்டோர்:

முதலாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி வித்தியாலயம், இரண்டாமிடம் யாழ். வலயத்தை சேர்ந்த பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம், மூன்றாமிடம் யாழ். வலயத்தை சேர்ந்த யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

19 வயதுக்குட்பட்டோர்:

முதலாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த யூனியன் கல்லூரி, இரண்டாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## இன்றைய ஆட்டம்

(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்று இன்றைய தினம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எட்டு ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடர் அணிக்கு ஏழு பேரைக் கொண்டதாகும். 40இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் முதலிரண்டு காலி-றுதி ஆட்டங்களிலும் ஸ்ரீமுருகன், அளவெட்டி மத்தி அணிகள் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றுள்ளன.

இன்றைய காலிறுதிப் போட்டியில் றோதோர்ன் அணியை எதிர்த்து றொசாரியன் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# ஒலிம்பிக்கின் 74ஆவது டே ரன் நிகழ்வு

(கொழும்பு)

நவீன ஒலிம்பிக்கின் ஜனனத்தைச் சிறப்பிக்கும் முகமாக அனைத்து நாடுகளின் நகரங்களிலும் கொண்டாடப்பட்டுவரும் ஒலிம்பிக்கின் 74ஆவது டே ரன் நிகழ்வுகள் கடந்த புதனன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றன.

விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவரும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சின் செயலாளருமான ஹேமசிறி பெர்னாண்டோ, பிரித்தானிய உப தூதுவர் றொபி புல்லொக் ஆகியோர் உட்பட விளையாட்டுத்துறை சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள், இலங்கை ஒலிம்பிக்கின் வீர வீராங்கனைகள், நகரசபைத் தலைவர்கள் மற்றும் கொழும்பிலுள்ள பாடசாலைகளின் ஆயிரக்கணக்கான மாணவர்களும் கலந்து கொண்டனர்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக்கின் 75ஆவது டே ரன் நிகழ்வுகளுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகரம் தெரிவு செய்யப்பட்டதைக் குறிக்கும் முகமாக டே ரன் நிகழ்வுகளுக்கான ஒலிம்பிக் கொடி ஏறாவூர் நகரசபையின் தலைவரும் முன்னாள் பிரதம மந்திரியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அலிஸாஹிர் மௌலானாவிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளை ஒட்டி ஏறாவூர் நகரம் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாக நகரசபைத் தலைவர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

ஒலிம்பிக்கின் தத்துவங்களை மாணவர்கள் மத்தியில் புகுத்துவதே இந்த தேசிய ஒலிம்பிக் டே ரன் நிழ்வுகளின் எதிர்பார்ப்பாகும். இந்நிகழ்வுகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இலவச சீருடைகளும் புத்தகங்களும் இன்னும் பல அன்பளிப்புக்களும் வழங்கப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



வடமாகாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணியினருக்கிடையில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் யாழ். திருக்குடும்ப தேசிய கன்னியர் மடப் பாடசாலை சம்பியனானது. கடந்த 27ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் பெண்கள் பிரிவில் முதலிடத்தை திருக்குடும்ப கன்னியர் மட தேசியப் பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரி அணியும் பிடித்துக்கொண்டன. முதலிடத்தைப் பிடித்துக்கொண்ட திருக்குடும்ப தேசிய கன்னியர் மடப் பாடசாலை அணியினரைக் காணலாம். (12, 93)



# கடுப்பேத்துறார் மை லோர்ட்...!

ஏ.கே.


தமிழ்த் திரைப்படம் ஒன்றில் நகைச்சுவை நடிகர் வடிவேலு வக்கீல் வண்டு முருகேசன் என்ற பாத்திரத்தில் பேசிய மிகப்பிரபலமான நகைச்சுவை வசனம் தான் "கடுப்பேத்துறார் மை லோர்ட்" என்ற வசனம். இதனை பேஸ்புக், ஈமெயில், சற்றிங், சாதாரண உரையாடல்கள் என்று எல்லா இளைஞர் வட்டங்களின் பேச்சு வழக்கிலும் (இனி முடியாத ஒரு நிலையில்) இந்த வசனம் இடம் பெறும்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் சில பிரத்தியேகமான "கடுப்பேத்துறார் மை லோர்ட்...!" அன்றாடம் இடம் பெறுகின்றன. குறிப்பாக போக்குவரத்துக்களில் இவை அதிகம். அவற்றில் சில




கடுப்பேத்துபவைகள் இங்கு அணிவகுக்கின்றன.

- வீதியில் இரு மருங்கும் ஆழமாக வெட்டிய நெடிய பள்ளங்கள் வாகனங்கள் இதில் இறங்கினால் அதோகதிதான்.
- தார் றோட் இருக்க வீதியின் கரையில் அகலிப்புக்காக போடப்பட்டிருக்கும் கிறவல் மண்ணில் வேகமாக பயணிக்கும் வாகனங்கள்... பின்னால் வருபவர்கள் தூசு மழைக்குள் மாட்டிக்கொள்வார்கள். உத்தரவாதமாக வாய்குள் மண் கடிபடும்.
- ஒடுக்கமான வீதி... இரு பக்கமும் அகலிப்புப் பணிகள்.... நீண்ட வாகனத் தொடர் அதற்குள்ளும் எல்லாருக்கும் இடையில் புகுந்து ஓடும் அவசர மோட்டார்சைக்கிள் காரர்கள். குறிப்பாக பள்சர்கள் (அநேகமாக இப்படி துண்டைக் காணம் துணியைக் காணம் என்று ஓடுபவர்கள் வேலையில்லாமல் வெட்டியாக இருப்பவர்களாக இருப்பார்கள்)
- சிக்னலை வலது பக்கம் போட்டு விட்டு திடீ-ரென இடது பக்கம் திருப்பும் பிரகிருதிகள்
- சுரணையே இல்லாமல் றோட்டைக் கடக்கும் அல்லது றோட்டில் நிற்கும் கால்நடைகள் (குறிப்பாக நாய்கள்...)
- இரவுப் பயணத்தில் குத்துமதிப்பாக இதுதான் வீதியென்று அல்லாடிக்கொண்டு பயணிக்கும் வேளைகளில் வெளிச்சத்தைக் குறைக்காது (dimm) செல்லும் வாகனக்காரர்கள்.
- ஸ்ரைலாக வாகனத்தை றிமோட் கொன்றோல் மூலம் பூட்டி விட்டு திறக்கத் தெரியாது கீக்... கீக்... என்று அலறிக்கொண்டு பின்னால் தரித்தவர்களுக்கு இடம் விடாமலும் தானும் எடுக்க முடியாமலும் திண-றும் நவீனர்கள்.
- இவை எவற்றையுமே கவனிக்காமல் ஸ்போட்ஸ்ரார் (sports star) சனலில் வரும் வாகன ரேஸ்காரர் போல ஒன்றையொன்று முந்தும் மினிபஸ், CTB பஸ் காரர்கள்.
- ஒரே பாட்டையே திரும்பத் திரும்ப போட்டு அறுக்கும் மினிபஸ் காரர்கள்... (மினிபஸ் பாட்டு என்றே ஒரு லிஸ்ட் (List) போடும் அளவுக்கு துன்பியல் பாடல்கள் இருக்கின்றன.....!
- எதிர்காற்றில் எச்சில் துப்பிப் போகும் யன்னலோரப் பயணிகள்.
- ஓடும் வாகனத்தில் கைகழுவிக் கொண்டு போகும் யன்னலோர உல்லாசப் பயணிகள்....
- ஓடினால் அறுபது கிலோமீற்றர் வேகத்தில் தான் ஓடுவேன் என்று ஸ்கூட்டியில் பறக்கும் நவநங்கையர்கள்....
- செல்போனில் கதைத்துக் கொண்டு வீதியை மறந்து நிற்கும் காதல் பிசாசுகள்.
- பூசையின் இடையிலும் ஒலிக்கும் செல்போனில் பதிலளித்துக் கொண்டிருக்கும் பூசகர்...
- குறிப்பான ஒரு தருணத்தில் திடீரென நின்று போகும் மின்சாரம்...
- பாட்டு கேட்போம் என்றிருந்தால் பேசியே அறுத்துக் கொல்லும் FM அறிவிப்பாளர்கள்...
- எதையோ மறந்தது போல திடீரென 90 பாகையால் திரும்பும் தற்கொலை வாகனதாரிகள்...
- சில்லறை இல்லையென தலையைச் சொறியும் கடைக்காரர்கள்...
- வாடிக்கையாளர்களைக் காக்க வைத்துக்கொண்டு நீண்டநேரம் தொலைபேசியில் உரையாடும் கடைக்காரர்கள்...
- வங்கியில் அவசரம் என்று கவுண்டரில் வரிசைக்கு நின்றால் தனது கியூரக்ஸ் அழிந்து போகாமல் கணினி கீபோட்டில் விரலை ஒற்றிக் கொண்டிருக்கும் இளம் வங்கி அம்மணிகள்...
- காக்க வைத்துக் கொண்டு தேநீர் குடிக்கப் போகும் அல்லது விடுப்புக் கதைத்துக் கொண்டு இருக்கும் அரச பணியாளர்கள் (சில அலுவலகங்களில் அலுவலகத்துக்கு வந்த பின்புதான் சீப்பால் தலை இழுப்பார்கள்)
- இளம் பெண்ணாக்கும் என்று பார்த்தால் திரும்பும் போது முதிய தோற்றம் அளிக்கும் "மேக் அப்" ஆச்சிகள்..
- எல்லா ஆவணங்களும் இருக்கும் போதும் திடீரென்று இடைமறித்து ஆவணங்களைக் கேட்கும் பொலிஸார்..
- ஒரே அறைக்குள்ளேயே நாலைந்து இடங்களைக் காட்டும் செல்பேசி சேவைகள்... ஒரே நேரத்தில் கோண்டாவில் காட்டும்.... திரும்பினால் புத்தூர்.. இங்கால திரும்பினால் கோப்பாய்.. ஹலோ.. விளங்கேல்ல.. இந்த சொற்கள் தான் அதிகம் கதைப்பதாக இருந்து கடுப்பேத்தும்...
- மூக்கை, காதை நோண்டிக் கொண்டிருக்கும்



ஹோட்டல் பணியாளர்கள்..

- எந்த நேரமும் வெயிட்டிங் (waitng) இல் இருக்கும் எதிர்முனை செல்பேசிகள்..
- பொறுத்த தருணங்களில் வந்து குறுக்கிடும் தொலைக்காட்சி விளம்பரங்கள்....

இவ்வாறாக நமது அன்றாட வாழ்வில் கடுப்பேற்றுபவைகள் பல. சில தவிர்க்கக் கூடியவை சில தவிர்க்க முடியாதவை... இங்கு குறிப்பிடப்படாத மகா கடுப்பேற்றல்கள் கூட உங்களுக்கு இருக்கலாம். இவ்வாறான கடுப்பேற்றல்களால் தான் உயர் இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற வியாதிகள் கொண்ட ஆரோக்கியமற்ற சமூகம் ஒன்று உருவாகுவதாக மருத்துவ ஆய்வுகள் சொல்லுகின்றன.

## "கனவு" பலித்தது?

அண்மையில் கனடா ஸ்காபரோவில் உள்ள பிரபல தமிழ் உணவகம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த வண்ண விளம்பரப் பிரசுரம் ஒன்று சொல்லியது:

"உங்களுக்கான புதிய ஆடம்பரமான வீடு யாழ்ப்பாணத்தில்"

"கட்டுமானப்பணி நடைபெறுகிறது. ஐப்பசி மாதம் 2013இல் நிறைவடையும்"

"விலை 10 மில்லியன் ரூபாவிலிருந்து"

இதனைப் படித்ததும் உள்ளே வரும்போது கடையின் பெயர்ப்பலகையில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம் நினைவில் பொறி தட்டியது.


"மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்கும்"

அடடா! கனவு பலித்துவிட்டதுதான் போலும்!!

- சன்னதன் -

# மணக்கும் திரைப்படங்கள்!

புரட்சிக் கவிஞர் பாடியது போல, "உருவினையும், ஒலி யினையும் ஒன்றாகச் சேர்த்தே ஒளிபெருகத் திரையினிலே படம்



காட்டும் கலை"யில் மணமும் கூட்டும் ஆராய்ச்சி ஒருபுறம் ஈடேறி வருகின்றது.

முப்பாட்டன் காலத்தில் ஊமைப் படங்கள். பாட்டன் கண்ட பேசும் படங்கள். இன்றைக்கு மணக்கும் படங்கள் ஆக இருப்பது அறிவியல் ஆச்சரியம்தான். அதாவது, திரை யில் வரும் சமையல் காட்சிகளின் வாசனை நம் மூக்கைத் துளைக்க வேண்டும். இதுவே 'மணக் காட்சி'.

ஆரம்பத்தில் 1916 ஆம் ஆண்டு அமெரிக்கத் திரையரங்கில் இந்த உத்தி முதன்முறையாகத் தொடங்கப்பெற்றது. "ரோஜாத் தொட்டி விளையாட்டு" என்ற செய்திக் குறும்படக் காட்சிப் பரிசோதனை அது. மின்விசிறி முன்னால் பன்னீர் வாசனைப் பஞ்சைப் பொருத்தி அரங்கில் வாசனை பரவச் செய்தனர். பென்சில்வேனியா நகரில் 'குடும்ப அரங்கு' ஒன்றில் இந்த உத்தி பரீட்சார்த்தமாக அறிமுகம் ஆயிற்று.

1929 ஆம் ஆண்டு நியூயோர்க் அரங்கு ஒன்றில் 'அகலவீதி இன்னிசை' என்கிற திரைப்படக் காட்சி. அரங்கின் மேற்கூரையில் இருந்து வாசனைத் திரவியத்தைத் தெளித்தனர் ஊழியர்கள். டெட்ரோய்ட் நகரில் மிச்சிகன் திரையரங்கில் 'கடற் பருந்து' போன்ற திரைப்படங்களிலும் இந்த உத்தி இடம்பெற்றதாம்.

தொடர்ந்து, 1959 ஆம் ஆண்டு 'பெரும் சுவருக்குப் பின்புறம்' என்ற திரைப்படக் காட்சியில் வேறு நுட்பம் புகுந்தது. அரங்கின் குளிரூட்டி அமைப்பு வழியாகவே மணப்பொருள்களைப் பரப்பினர். அந்த அமைப்பிற்கு 'அரோமா ரமா' என்று பெயர்.

1943 ஆம் ஆண்டு 'நியூயோர்க் டைம்ஸ்' இதழில் இத்தகைய 'வாசனைக் காட்சி' ('சென்டோ விஷன்') தொடர்பாக இன்னொரு புதுமைச் செய்தி. திரைப்படச் சுருள் விளிம்பில் ஒலித்தடத்திலேயே மணம் கிளப்பத் தேவையான 'கேளா ஒலியலைகள்' பதிந்து விட்டால் போதும். மணக்காட்சி திரையில் வரும்போது அந்தக் காட்சியில் வெளிப்படும் மணத்தைப் பார்வை யாளர்க்கு உணர்த்தலாமாம்.

1960 ஆம் ஆண்டுகளில் பிரபல ஹொலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர் மைக்டாட் என்பவரின் புதல்வர் ஜூனியர் மைக் டாட் என்பவர் 'மர்ம வாசனை' என்று ஓர் திரைப்படம் தயாரித்தார். அதில் வெள்ளித்திரையில் வரும் காட்சிக்கு ஏற்ப திரையரங்கில் மணம் பரவும்.

அதாவது, திரையரங்கின் ஒவ்வொரு இருக்கையிலும் ஏறத்தாழ 30 வகை வாசனைத் திரவியங்கள் சிறுகலன்களில் நிரப்பப்பட்டு இருக்கும். அவற்றின் மின் அடைப்புகள் ஒரு குறித்த அலைநீள ஒலியலைக-ளால் தூண்டப்பட்டுத் திறக்கும். அப்போது அந்தந்த வாசனைத் திரவியக் கலன்கள் விசேஷ மணம் பரப்பும்.

இதே நுட்பம் இன்று பெரு மளவு வளர்ந்து வருகிறது. 1990 ஆம் ஆண்டுகளில் அவெரி கில் பர்ட் என்னும் வாசனை விஞ்ஞானி 'டிஜி சென்ட்ஸ்' என்கிற வாசனைத் தொழில்நுட்பக் கம்பெனியில் இந்தத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தினார்.

இதில் மரம், புல், தாவரங்கள் ஆகிய முக்கிய மூன்று வித வாசம் மட்டும் வெளிப்படும்படி ஒரு கருவி தேவை. மணக்காட்சிக்கு ஏற்ப அதனை இயக்குவிக்கலாம்.

இங்கிலாந்தில் 'பான் லாப்ரிந்த்' என்ற திரைப்படம் வெளியானது. அதன் விசேஷம் என்னவென்றால், திரையில் தோன்றும் மீன் சந்தையின் வாடை அரங்கினுள் உணரப்படும்.

சமீபத்தில் 'ஸ்மெல் இட்' என்ற பெயரில் ஒரு கருவி பிரான்சில் அறிமுகமாகி இருக்கிறது. 'இதை முகர்' என்று பொருள். மலர்களின் நடுவில் நின்று ஆடினால் சுகந்தம் நம் இமைகளைத் தழுவ வேண்டும்.

இந்த உத்திகள் இங்கே நடைமுறைக்கு வர இன்னும்



நூறாண்டுகள் ஆகும். இங்கே நாயக நாயகியர்கள் மணம் இல்லாத வறண்ட பாலைவனங்களில் அல்லவா குதியாட்டம் போடுகிறார்கள்.

ஆனால் ஜப்பானின் சோனி நிறுவனத்தினருக்கு முற்றிலும் புதியதோர் சிந்தனை தோன்றியது. அதன்படி, மணப்பொருள் கலன்களே தேவையில்லை. காட்சி ஒலி அலைகளின் மேல் அதிர்வெண் கூடுதலான கேளா ஒலியலைகளையும் ஏற்றிப் பரவ விடலாம். அந்தப் புற ஒலியலை கள் காட்சியில் எந்தவொரு ஒலிக்கும் இடையூறாகவும் இராது. கேளா ஒலி ஆயிற்றே!

பொதுவாக, ஒவ்வொரு வாசனையையும் மூளை ஒரு குறித்த பகுதியில் நிகழும் இரசாயனவியல் மாற்றங்களால் உணர்கிறது. எந்தப் பகுதியினால் அந்த வாசனை உணரப்படுகிறதோ, மூளையில் அந்தந்த இடங்களைக் கண்ணுக்குத் தெரியாத கேளா ஒலியினால் தூண்டிவிட்டால் போதுமே. படம் காண்பவர்க்கு நிகழ் திரையில் தோன்றும் பொருளின் மணம் நிஜத்தில் உணரப்படும். இது புது வகை 'மாய நிஜம்'.

சமீபத்தில் 'இணைய மணக்காட்சி' என்கிற அதிநவீனத் தொழில்நுட்பம் குறித்து தென் கொரிய நாடு சிந்தித்து வருகிறது.

'வாசனை தூண்டும் தொலைப்படக் காட்சிக் கருவிகள்' எனும் அமைப்பு இத்துறையில் 2015 ஆம் ஆண்டிற்குள் தன் கனவை நனவாக்கிவிடும் என்று தெரிகிறது.

என்னதான் இறுக்கமான சிக்கனத் திட்டங்களை (Austerity Packet) கடைப்பிடிக்கும்படி சர்வதேச நாணய நிதியமும் (International Monetary Fund), ஐரோப்பிய மத்திய வங்கியும் வலியுறுத்தினாலும் தெற்கு ஐரோப்பிய நாடுகள் மேலும் மேலும் மோசமான நிலைமைகளுக்கே செல்வதாகக் கிரேக்கத் தொழிற்சங்கவாதி Themistoklis kolsifakis எச்சரிக்கிறார். ஜேர்மனிய தொழிற்சங்கத்தின் அழைப்பையேற்று ஸ்பெயின், போர்த்துக்கல் தொழிற்சங்கவாதிகளும் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்கூறிய கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச் சிக்கனத் திட்டத்தின் மூலம் மக்கள், தங்களின் உயிரைப் பிடித்து வைத்திருப்பதற்காக தமது அன்றாட அடிப்படைத் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளுமாறு, அதாவது வயிற்றை இறுக்கக் கட்டிக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். பள்ளிச்சிறார்கள் தமது எதிர்காலம் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் பசித்த வயிறுடனே பள்ளி செல்கிறார்கள். கடந்த மூன்று வருட, கிரேக்க மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை நீங்கள் எவருமே கற்பனை செய்து பார்க்க முடியாதென்றார்.

இதற்கு சற்றும் குறைவில்லாத நிலைமையே ஸ்பெயினிலும், போர்த்துக்கல்லிலும்

# எதிர்காலம் கேள்விக்குறியே!



நிலவுவதாக அந்நாட்டு உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டனர். எல்லா இடங்களிலும் வறுமையே வளர்ந்து வருகிறது. அனைத்துக் குடும்பங்களும் பாட்டன்மார்களின் ஓய்வூதியத் தயவிலேயே வாழ்க்கையை ஓட்டுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நெருக்கடியை வருங்கால இளம் சந்ததியினரே முகம் கொடுப்பதாகக் கூறுகின்றனர். 14 வயதிற்கும் - 24 வயதிற்கும் இடைப்பட்டவர்களின் வேலை இல்லாதோரின் வீதம் ஸ்பெயினில் 45.7, கிரேக்கத்தில் 38.5 வீதம், இத்தாலியில் 27.8 வீதம், போர்த்துக்கல்லில் 26.8 வீதம் என்று புள்ளிவிபரங்களும் பறைசாற்றுகின்றன. அபாயகரமான நிலைமை என்னவெனில் கிரேக்கத்திலும், ஸ்பெயினிலும் முழுச் சந்ததியுமே எதிர்காலம் பற்றிய எந்தவித நம்பிக்கையுமற்றே வளர்ந்து வருகிறது. இது ஐரோப்பாவில் நம்பகத்தன்மையையும், ஜனநாயகத்தையும் ஆபத்திற்குள்ளாக்குகிறது.

பாதிப்புக்குள்ளாகும் ஜனநாயகம், தொழிலாளர்களின் உரிமைகளை மட்டுப்படுத்தி தொழிலாளர்களை, தொழில் வழங்குநர்களால் தன்னிச்சையாக வேலையிலிருந்து தூக்கியெறிவதை இலகுபடுத்தியுள்ளது. அவர்களின் வேலைநிறுத்தப் போராட்ட உரிமையையும் மட்டுப்படுத்துகிறது என்கின்றனர். ஆம், பெரு நிறுவனங்களின் தயவில் தங்கிநிற்கும் மேற்குலகின் சிக்கனத் திட்டங்களெல்லாம் சாதாரண மக்களின் அடிமடியிலேயே கைவைக்கின்றன. விற்பனைவரியை அதிகரித்தல், குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும் வருமான-வரியை அறிமுகம் செய்தல், சம்பளவெட்டுச் செய்தல், விடுமுறைக் காலத்தில் கொடுக்கும் இனாமை இரத்துச்செய்தல் போன்ற மக்கள் நலன்சாராத, தொழிலாளர் நலன்சாராத திட்டங்களே அவை.

**- ஆனந்த தேவன்**

# ஓடிஸம், கான்ஸர் மற்றும் நாய்



ஓநாய்களின் மிருகத்தன்மையை மட்டுப்படுத்தி அவற்றை தம் தேவைகளுக்கு சாதகமாய் பயன்படுத்த மனிதர்கள் எப்போது தொடங்கினார்கள் என்பது துல்லியமாய் தெரியவில்லை. ஆனால் கி.மு. 30000த்திலேயே இதற்கான தடயங்கள் இருப்பதாய் தொல்லியல் வல்லுனர்கள் சொல்கிறார்கள். 12000 வருடங்களுக்கு முன் பாலஸ்தீனத்தில் ஒரே கல்லறையில் ஒரு மனிதனும் நாயும் சேர்ந்து புதைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனிதர்களின் சகவாசத்தில் கிடைக்கும் உணவுப் பாதுகாப்புக்கு பிரதியாய் வேட்டையில் உதவி செய்யவும், உணவு தேடவும், மனிதர்களின் பாதுகாப்புக்கும் பலகாலமாய் நாய்கள் உதவி வந்திருக்கின்றன. இன்று நாய்களின் மோப்ப சக்தி பொலிஸ், இராணுவம், மருத்துவம் என்று பலவிதத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தம் உயிரைப் பற்றிய கவலை இல்லாமல் கடமையே கருத்தாய், (இலஞ்சம் வாங்காமல்) திறமையாய் போதை மருந்துகள், குண்டுகள் மற்றும் நிலக்கண்ணி வெடிகளை கண்டுபிடிப்பதில் பொலிஸ் துறைக்கு உதவி செய்கின்றன. கண் தெரியாதவர்களுக்கு வழிகாட்ட பலவருடங்களாகவே நாய்கள் உதவி வந்திருப்பினும், நாய்களின் மோப்ப சக்தியை கான்ஸர் போன்ற வியாதிகளை கண்டுபிடிப்பதற்கும் உபயோகப்படுத்தலாம் என்று இன்றைய மருத்துவம் சொல்கிறது. ஓடிஸம், ஆஸ்பெர்ஜெர் போன்ற நோய்குறித்தொகுதிகள் உள்ளவர்களுக்கு நாய்களின் அண்மை அமைதியைக் கொடுக்கும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டு இன்று அத்தகையவர்களுக்கான சிறப்புப் பள்ளிகளில் லப்ரடார் போன்ற நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நாய்களுக்குப் பயிற்சி கொடுப்பது இன்று ஒரு பெரிய தொழிலாய் நடந்து வருகின்றது. வீட்டில் செல்லமாய் நாய் வளர்ப்பவர்கள் கூட தம் நாய்களின் திறமைகளை வருபவர்களுக்குக் காட்டிப் பெருமைப்படுவதற்காக அவற்றுக்குப் பலவித தந்திரங்களைச் சொல்லிக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நம் தொனியிலிருந்து நம் மனநிலையை உணர்ந்துகொள்வதற்கும் மேலாக, நாய்களுக்கு 160 வார்த்தைகள் வரை புரிந்துகொள்ளும் திறன் உண்டு. பந்தை தூக்கிப் போட்டு பிடிப்பது, ஒளித்து வைத்த விளையாட்டுச் சாமானைக் கண்டு பிடிப்பது போன்ற தந்திரங்களை மீறி இன்று சில நாய்கள் நாட்டியம் கூட ஆடுகின்றன. சமீபத்தில் பிரிட்டனில் நடந்த ஒரு போட்டியில் நடனமாடி 50000 பவுண்களைப் பரிசாய் வென்ற நாயின் அபாரத் திறமையையும் அதற்குப் பயிற்சி அளித்தவரின் சாதனையயும் தொலைக்காட்சிகளில் காட்டினார்கள்.

போகிறபோக்கில், நாய்கள் சமைத்து, வீடு பெருக்கித் துடைக்கும் நாளும் வெகுதூரத்தில் இல்லை என நம்பலாம் போலிருக்கிறது. இதை எல்லாம் கற்றுக்கொண்டு நம்மைக் கட்டிப் போடாமல் இருந்தால் சரிதான்.

# சமூக வலைத்தளங்களின் பொருளாதார அடிப்படை

**- அப்துல் -**

பேஸ்புக், ட்விட்டர், கூகுள் போன்ற சமூக வலைத்தளங்களின் மதிப்பை உருவாக்குவது அவற்றைப் பயன்படுத்தும் பயனர்கள்தான்.

1. கூகுள் நிறுவனம் வழங்கும் இணைய தேடுதல் சேவையின் முடிவுகள் காட்டப்படும் போது விளம்பரங்களும் தனியாக காட்டப்படுகின்றன. பயனர் ஒரு விளம்பரத்தைக் கிளிக் செய்து விளம்பரதாரரின் தளத்துக்குப் போனால் கூகுள் விளம்பரதாரரிடமிருந்து வருமானம் ஈட்டுகிறது.

2. இந்த விளம்பரதாரர்களை தேடிப் பிடித்து விற்கும் பணியைக் கூட கூகுள் நிறுவன ஊழியர்கள் செய்ய வேண்டியதில்லை.

குறிப்பிட்ட தேடும் சொல்லுக்கு தமது விளம்பரத்தைக் காட்டுவதற்கு ஆயிரக்கணக்கான சிறு-நடுத்தர-பெரிய விளம்பரதாரர்கள் கூகுள் ஆட்வேர்ட்ஸ் மூலம் போட்டி போடுகிறார்கள். உதாரணமாக, “கனடாவில் கடை வாடகைக்கு” என்ற பதம் தேடப்படும் போது தனது விளம்பரம் காட்டப்பட ஒரு கிளிக்கிற்கு எவ்வளவு கட்டணம் தரத் தயார் என்று ஒருவர் தனது ஏலத் தொகையை சமர்ப்பிக்க வேண்டும். அதிக தொகை சொல்பவரின் விளம்பரம் முதலில் காட்டப்படும்.

3. இந்த விளம்பரங்களை காட்டுவதற்கான களத்தை விரிவாக்க புதிய புதிய சேவைகளுக்கான தளங்களை உருவாக்குகிறது கூகுள். “இலவசமாக” வலைப்பதிவுகள், வீடியோ சேவை, புகைப்படங்கள் சேவை போன்றவற்றை பயனர்களுக்கு வழங்குகிறது. ஒரு வலைப்பதிவில் எழுதப்பட்டிருக்கும் விஷயத்துக்குப் பொருத்தமான விளம்பரங்கள் (எழுப்பட்டிருக்கும் சொற்களின் அடிப்படையில்) அதன் பக்கங்களில் காட்டப்படுதற்கு விளம்பரதாரர்கள் போட்டி போடுவார்கள். அந்த விளம்பரங்களை கிளிக் செய்து போனால் அவர்கள் கூகுளுக்கு கட்டணம் செலுத்துகிறார்கள்.

அந்த வருமானத்தின் ஒரு பகுதியை வலைப்பதிவர்களுடன், வீடி-யோ உருவாக்குனர்களுடன் பகிர்ந்து கொள்கிறது கூகுள். இதற்காக ஆட்சென்ஸ் என்ற திட்டத்தை நடத்துகிறது.

4. “இலவசமாக” வழங்கும் மின்னஞ்சல் சேவையில், பயனருக்கு வந்திருக்கும் மின்னஞ்சலை படித்துப் பார்க்கும் கூகுளின் மென்பொருள் மூலம் அதில் இருக்கும் சொற்களுக்குப் பொருத்தமான விளம்பரங்கள் ஆட்வேர்ட்ஸ் மூலம் காண்பிக்கப்படுகின்றன. கிளிக்குகளுக்கு வரும் வருமா-னம் முழுமையாக கூகுளுக்குப் போய்ச் சேருகிறது.

கூகுளின் இந்த வணிக மாதிரியின் இன்னும் விரிவான வெற்றிகரமான செயல்பாடுதான் பேஸ்புக். “பேஸ்புக்குக்கு பயனர்கள் ஆதாரமா, பயனர்களுக்கு பேஸ்புக் ஆதாரமா” என்று கேட்டால், பயனர்கள் இல்லாமல் பேஸ்புக் இல்லை என்றுதான் அறுதியாக சொல்ல வேண்டியிருக்கும்.




மைதானத்தில் பெரிய பந்தல் போட்டு, ஊரெங்கும் நோட்டிஸ் ஒட்டி பிரபலமாக்குவதுதான் பேஸ்புக்கின் வேலை. கூட்டம் சேர சேர பந்தலை விரிவுபடுத்துவது, கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது இவைதான் தொடரும் அதன் பணிகள். கூட்டமாக சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளத்தான் வந்திருக்கிறார்கள். சிறு சிறு குழுக்களாக குழுமிக் கொள்கிறார்கள். ஒரு குழுவில் நடனம் நடக்கிறது, ஒரு குழுவினர் நாடகம் போடுகின்றனர், ஒருவர் பாட்டு பாடுகிறார், ஒருவர் உரையாற்றுகிறார், ஒருவர் சமையல் செய்கிறார், ஒருவர் குடிநீர் வழங்குகிறார். கூட்டத்தை நடத்துவது வந்திருக்கும் மக்கள்தான்.

அப்படி கூடும் மக்களுக்கு பொருட்களை விற்க கடை போட வருமாறு வணிகர்களை வரவழைத்து கட்டணம் வசூலித்து வருமானம் பார்ப்பதும் பேஸ்புக்கின் வேலைகளில் ஒன்று.

பயன்ர்களின் புகைப்படங்கள், கருத்துரைகள், தொடர்புகள் அனைத்தும் பேஸ்புக்குக்கு பணம் சம்பாதித்துத் தரும் கறவை மாடுகள் தான். பேஸ்புக்கில் சேர்க்கப்படும் ஒவ்வொரு புகைப்படமும், அதில் எழுதப்படும் ஒவ்வொரு கருத்துரையும், அதில் தொடங்கப்படும் ஒவ்வொரு விவாதக் குழுவும், அதில் செயல் படுத்தப்படும் ஒவ்வொரு விளையாட்டும் பேஸ்புக்கின் விளம்பர சந்தையை விரிவாக்கி அதன் வருமானத்தை பெருக்குகின்றன. அந்த வருமானத்தில் ஒரு பகுதியின் மூலம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுபவைதான் அதன் சேவைகள்.

இப்படி தான் பராமரிக்கும் சேவையை பயன்படுத்துகின்ற பயனர்களை பொதிந்து விற்று சம்பாதித்ததுதான் பேஸ்புக்கின் சென்ற ஆண்டு வருமானமான 1 பில்லியன் டொலர் (சுமார் 5,000 கோடி ரூபா). அந்த வருமானத்தின் அடிப்படையில் நடக்கும் பங்குச் சந்தை சூதாட்டம்தான் பேஸ்புக் பங்குகளை வெளியிடும்போது தீர்மானிக்கப்பட்ட அதன் மதிப்பான 100 பில்லியன் டொலர் (சுமார் 5 இலட்சம் கோடி ரூபா).

இணையமும் அதில் கிடைக்கும் “இலவச” சேவைகளும் உலகம் முழுவதும் வசிக்கும் மக்கள் தமது சமூக உழைப்பால் உருவாக்கும் சாத்தியங்கள்தான். அதே போல நாம் பயன்படுத்தும் அனைத்து பொருட்களும் சேவைகளும் சமூக உழைப்பின் மூலமே நம்மை வந்தடைகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

# பட்டம்-2

- ஜெயந்தி சங்கர்

(நேற்றைய தொடர்ச்சி)

**சீனப்** பட்டங்கள் இரண்டு முக்கிய வகைகளிலானவை. ஒன்று, தனியே கழட்டி எடுக்கக் கூடிய இறக்கைகளுடனானவை. மற்றொன்று, கழட்டியெடுக்க முடியாத நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருக்கும் இறக்கைகளையுடையவை. முதல் வகையைப் பெட்டியில் வைத்துக் கட்டுவது எளிது. பரிசளிக்க ஏற்றது. ஆனால், இரண்டாவது வகை முதல் வகையைவிட மிக நன்றாக உயரப் பறக்கக் கூடியது. படிவங்கள் மற்றும் உருவங்களை வைத்துப் பார்த்தால் மனித உருவம், மீன், பூச்சி, பறவை, விலங்குகள், எழுதப்பட்டிருக்கும் சித்திர எழுத்து என்று 300 வகைக்கும் மேல் இருக்கின்றன. சுமார் 30 சென்ரி மீற்றரிலிருந்து 304 மீற்றர் அளவு வரையிலும் பல்வேறு அளவுகளில் இவை கிடைக்கும்.


பட்டம் உருவாக்க நாட்டுக்கு நாடு வேறுபட்ட விதிமுறைகள் நிலவினாலும் பறக்க விடும் போது எதிரிப் பட்டத்தின் நூலை அறுக்க வேண்டும் என்பதே விளையாட்டின் பொது விதியாக இருந்து வருகிறது.

மிகவும் பெருமைக்குரிய பெரிய ஒரு பட்டத்தைச் செய்வதொன்றும் எளிதல்ல. சட்டத்திற்கு உகந்த சரியான மூங்கில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தடிப்பாகவும் உறுதியாகவும் இருத்தல் வேண்டும். அப்போது தான் வேகமான காற்றில் பெரிய பட்டத்தால் அழுத்தத்தை எதிர்கொள்ள முடியும். சின்னப்பட்டங்களுக்கு மெல்லிய மூங்கில் தடிகளே போதுமானது. காகிதம் தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. என்றாலும், பட்டுத் துணியும் பட்டத்துக்கு மிகவும் ஏற்றது. பட்டு மிக நீண்ட காலத்துக்கு உழைக்கக்கூடிய உறுதியைப் பெற்றிருக்கும். தவிர, பட்டுத் துணியால் செய்யப்படும் பட்டம் பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். ஆகவே, இதன் மதிப்பும் கூடுதலாக இருக்கும்.

பட்டத்துக்கு வண்ணமிடுதல் தான் மூன்றாவது கட்டம். இதை இரண்டு முறைகளில் செய்யலாம். பெருமளவு உற்பத்தியில் ஏற்கனவே அச்சிடப்பட்ட காகிதத்தையே பயன்படுத்துவார்கள். சிறிய எண்ணிக்கையில் பயன்படுத்த ஏற்றாற்போல உருவாகும் பட்டங்கள் கையால் வண்ணம் தீட்டப்படுகின்றன. இவற்றில் ஒரு பைன் மரம், கொக்கு போன்ற அதிர்ஷ்டத்தையும் நீண்ட ஆயுளையும் பிரதிபலிக்கும் உருவங்களும் தூரிகையெழுத்துகளும் தீட்டப்படுவதுண்டு. வௌவ்வால்கள், பீச் பழங்கள் போன்ற செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் குறிக்கும் வடிவங்களையும் கூடத் தீட்டுவார்கள்.

டாங் முடியாட்சியில் (618-907) தான் பட்டத்தை இராணுவப் பயன்பாட்டுக்கு ஏற்றாற்போல மேம்படுத்தினர். பட்டுக்கு பதிலாகக் காகிதம் பயன்பட்டது. ஸோங் முடியாட்சியின் (960-1279) போது பட்டம் சார்ந்த ஆய்வுகளும் முன்னேற்றங்களும் பயன்பாடுகளும் உச்சத்தை எட்டின. பட்டங்களின் தேவை அதிகரித்தது. ஆகவே, அதைச் செய்வோரும் அதிகரித்தனர். மிங் முடியாட்சியும் (1368-1644) ச்சிங் முடியாட்சியும் பட்டத்தின் பொற்காலமாகக் கருதப்பட்டன. தாமே பட்டம் செய்து வண்ணம் தீட்டி பிரியமானவர்களுக்குப் பரிசளிக்கும் வழக்கங்கள் உயர்குடியினரிடையே பெருகியது.

ஏழாம் நூற்றாண்டில் ஒரு பௌத்த பிக்கு பட்டத்தை ஜப்பானுக்குக் கொண்டு போனார். அங்கு முதலில் பட்டங்கள் தீய சக்திகளை விரட்டி, நல்ல அறுவடையைப் பெற உதவும் என்று கருதிப் பயன்பட்டன. பிறகு, ஏடோ காலத்தில், பொதுமக்களுக்குப் பட்டம் விட அனுமதி கிடைத்தது. அன்றைய ஏடோ (இன்றைய டோக்கியோ) அரசாங்கம் இந்தப் பொழுது போக்கை ஊக்கவில்லை. மக்கள் வேலையைக் கருத்தில் கொள்ள மறந்ததால் அரசாங்கத்துக்கு பட்டம் விடுவது பிடிக்கவில்லை.




ஜப்பானில் ஒரு கதை சொல்வார்கள். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திருடன் பெரிய பட்டத்தில் பறந்து நகோயா கோட்டைக்கு மேல் போனான். அங்கிருந்த தங்கச் சிலை ஒன்றைத் திருட நினைத்தான். ஆனால், சில துண்டுகளை மட்டுமே அவனால் எடுக்க முடிந்திருக்கிறது. அவன் பின்னர் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறான். எடுத்த வேலையை முடிக்காமல் கவனம் திரும்பியது பட்டத்தால் என்பது உட்கருத்து.

16-17ஆம் நூற்றாண்டுகளில் ஜப்பானுக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இடையில் பட்டம் விற்கவும் வாங்கவும் பட்டிருக்கின்றன.

கி.பி 1232இல், மங்கோலிய எல்லையில் பட்டங்கள் அம்புகள் மற்றும் வில்களுடன் வீரர்களை உயரே பறக்க விடப் பயன்பட்டிருக்கின்றன. அங்கிருந்து எதிரிகளைத் தாக்கியிருக்கிறார்கள்.

13ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் பட்டத்தை மார்கோ போலோ இத்தாலிக்குக் கொண்டு போனார்.

**1822இல், ஜோர்ஜ் பொக்கோக் என்பவர் ஒரு ஜோடி பட்டங்களைக் கொண்டு ஒரு வண்டியை ஒரு மணி நேரத்தில் 20 மைலுக்குச் செலுத்தியிருக்கிறார். அவரின் சில பயணங்கள் ஒருமணி நேரத்தில் 100 மைல் வரையிலும் கூட இருந்திருக்கிறது.**



பின்னர், 1500களில் ஐரோப்பாவிற்குப் பரவியது. அதன் பிறகு, ஐரோப்பியர்களின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் ஆய்வுகளுக்கும் பட்டம் பல்வேறு வழிகளில் உதவிற்று. கடல் வணிகத்தின் போது வேண்டாதவருக்குத் தண்டனையளிக்க, மீன்பிடித்துறையில் மீன்பிடிக்க, மதக் கொண்டாட்டங்களில் அலங்கரிக்க, வானிலையைக் கணிக்க, காற்றின் வேகத்தை அறிய என்று ஏராளமான பயன்பாடுகள் பட்டத்திற்கு இருந்திருக்கின்றன.

போக்குவரத்துத் துறையில் பட்டம் உதவியிருக்கிறதென்றால் சிலரால் நம்ப முடியாமலிருக்கலாம். 1822இல், ஜோர்ஜ் பொக்கோக் என்பவர் ஒரு ஜோடி பட்டங்களைக் கொண்டு ஒரு வண்டியை ஒரு மணி நேரத்தில் 20 மைலுக்குச் செலுத்தியிருக்கிறார். அவரின் சில பயணங்கள் ஒருமணி நேரத்தில் 100 மைல் வரையிலும் கூட இருந்திருக்கிறது. அன்றைய காலகட்டத்தில் ஒரு வண்டியில் பூட்டியிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே சாலைவரி விதிக்கப்பட்டது. ஆகவே, இவரின் இப்பயணங்களுக்கு வரி விதிக்கப்பட வில்லை!

1782இல், பெஞ்சமின் ஃப்ராங்க்ளின எனும் அமெரிக்க விஞ்ஞானி மின்னலையும் இடியையும் ஆராய்ந்தறிய பட்டங்களைப் பயன்படுத்தியிருக்கிறார். இவர் பட்டங்களைக் கொண்டு செய்த ஆய்வுகளின் மூலம் காற்றுவெளியில் இருந்த மின்சாரத்தை ஆராய்ந்தார்.

அலெக்ஸாண்டர் கிரஹம் பெல் மற்றும் ரைட் சகோதரர்கள் ஆகியோரும் பட்டங்களைக் கொண்டு பல ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெட்டி வடிவிலான பட்டங்களைக் கொண்டு 1890களில் தொடங்கி 40 ஆண்டுகளுக்கு காற்றின் வேகம், வெப்பம், அழுத்தம் மற்றும் ஈரப்பதத்தைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

இன்றும் மீனவர்கள் தூண்டிலைக் கடலுக்குள் விட பட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள். புகைப்படக்கலைஞர்கள் பட்டத்தின் உதவியுடன் மேலிருந்து. பருந்துப் பார்வையில் புகைப் படங்களைச் சுட்டுத் தள்ளுகிறார்கள்.


1894 நவம்பர் 12இல், லோரன்ஸ் ஹார்கிரேவ் என்பவர் தனது பட்டத்திலேறி நிலத்திலிருந்து எம்பிச் சிறிது




தூரம் பறந்தார். அன்றே அவர் விமானத்தைக் கிட்டத்தட்ட கண்டுபிடித்தார் என்று சொல்லலாம். மேலும் நுட்பமாக ஆராய்ந்து வளைந்த இறக்கைகள் கொண்டதும் விசையுடனானதும் என்று பல்வேறு வகைப் பட்டங்களை உருவாக்கினார். அத்துடன் வானிலைக் கருவிகளும் புகைப் படக் கருவிகளையும் பட்டங்களை வைத்து மேற்கொண்ட ஆய்வுகளில் கண்டுபிடித்தார். தன் கண்டுபிடிப்புகளுக்கு அவர் காப்புரிமை பெறத் தவறிவிட்டார். மனிதகுல மேன்மைக்குப் பயன்படட்டும் என்று கருதிவிட்டார்.

19ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான ஆய்வுகளுக்கும் 20ஆம் நூற்றாண்டில் இரர்ணுவப் பயன்பாடுகளுக்கும் பட்டம் உதவியிருக்கிறது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் பட்டங்கள் இராணுவ ஒற்றர்களை ஏற்றிக்கொண்டு உயரப் பறந்திருக்கின்றன. முதல் உலகப்போரின் போது பிரித்தானிய, பிரெஞ்சு, இத்தாலிய மற்றும் ரஷ்ய இராணுவங்கள் பட்டங்களைக் கொண்டு எதிரிகளைக் கண்காணிக்கவும் செய்திகள் பரிமாறிக் கொள்ளவும் செய்தன. ஜெர்மானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலில் இராணுவ வீரனைத் தூக்கிக் கொண்டு பறக்கும் பட்டங்களைத் தொடர்ந்தும் பயன்படுத்தி வந்தது.

இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கக் கடற்படையில் பட்டங்களின்



பல்வேறு பயன்கள் நடைமுறையில் இருந்தன. ஹரி சாவ்ல்லின் பேரேஜ் பட்டம், இலக்கிற்கு மிக அருகில் விமானங்கள் பறக்காமல் முன்னெச்சரிக்கையாகத் தடுத்தன. விமானி கடலில் காணாமல் போனால் கிப்ஸன்-கேர்ள் எனும் பெட்டிப் பட்டத்தைப் பறக்க விட்டு உதவியை நாடினர்.

இரண்டாம் உலகப்போரின் போது (1939-1945) பட்டத்தைப் பறக்கவிட்டு இலக்கைக் குறிபார்த்துச் சுடும் பயிற்சியளிக்கப்பட்டது. 1903 நவம்பரில் சாமுவேல் ஃப்ராங்க்ளின் கோடி எனபவர் பட்டங்களால் செலுத்தப்பட்ட கப்பலில் ஆங்கிலக் கால்வாயைக் கடந்தார்.விமானத்தின் அறிமுகம் இந்தப் பட்டங்களின் பயன்பாட்டைப் பழைமையாக்கி விட்டன. அதன் பிறகு தான், பட்டம் விடுதல் வெறும் பொழுதுபோக்காயிற்று. கடந்த 50 ஆண்டுகளில் இந்தப் பொழுது போக்கு மிகவும் தீவிரமடைந்துள்ளது. நைலோன், ஃபைபர் கிளாஸ், கார்பன் கிராஃபைட் போன்றவற்றைக் கொண்டு மிக உறுதியான பட்டங்களைச் செய்தனர். இவை குறைந்த எடையுடன் நீண்ட நாள் உழைக்கும் தன்மை கொண்டவை. நவீன பட்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. பீட்டர் லின் என்பவர் 1980களில், நியூஸிலாந்தில் ஒரு 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' பட்டத்தை உருவாக்கினார். இது இயந்திரத்துடன் கூடியது. 1999இல், ஒரு குழுவினர் பட்டத்தைக் கொண்டு வடதுருவத்தில் 'ஸ்லெட்ஜ்'களை இழுத்திருக்கிறார்கள்.

1972இல், பீற்றர் பவெல் என்பவர் பொழுதுபோக்குக்கு மட்டுமில்லாமல் தீவிர விளையாட்டாகவும் பட்டத்தை விடலாம் என்று கருதினார். அப்போதிலிருந்து பட்டங்களில் மாற்றங்களும் மேம்பாடுகளும் செய்யப்பட்டன. நுட்பமான வித்தைகள் செய்து காட்டினர். வேகமாகப் பறக்க விட்டனர். பல போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. இசைக்கு ஏற்ப ஆடிப் பறக்கும் பட்டங்களும் எல்லோரது கருத்தையும் கவர்ந்தன.

பட்டம் தயாரித்து ஏற்றுமதி செய்வது நாட்டின் பொருளாதர மேன்மைக்கும், பட்டம் பறக்க விடுதல் தனி மனித ஆரோக்கியத்துக்கும் உகந்தது என்று நினைத்து இன்றைய சீன அரசாங்கம் பட்டங்கள் தயாரிப்பதையும் பறக்க விடுவதையும் மிகவும் ஊக்கப் படுத்துகிறது.

# வாசிப்பு பழக்கத்தை அதிகரிப்பதற்கு இலத்திரனியல் ஊடகங்கள் சிறந்தவை

## - யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

(கிரு - சாரா - சிகரம்)

வாசிப்புப் பழக்கம் குறைந்துவரும் இன்றைய சூழலில், அதனைச் சரிசெய்வதற்கு இலத்திரனியல் ஊடகங்கள் வழிசெய்ய முடியும் என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

'தமிழ் இதழியல் வரலாறு' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் விசேட கருத்தரங்கும் கண்காட்சியும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மற்றும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஊடகக்கல்வி தொடர்பான அறிவுறுத்தல்கள் தற்காலத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமானது. மொழியின் தேவை இத்துறைக்கு அவசியம். அதற்காகவே தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு எனும் புதிய கல்வித்துறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஊடகத்துறை இவ்வாறு ஒரு கல்வித்துறையாக வளர்ந்து வரும் நிலையில், பத்திரிகைகள் உண்மையான செய்திகளை வெளியிட்டு மக்களுக்குச் சரியாக வழிகாட்டவேண்டும் என்று தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் தற்காலத்தில் பல நல்ல விடயங்களைப் பெற்றுக்கொள்ளக்



கூடியதாக உள்ளதாகவும், அரிய நூல்களை இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடிவது ஒரு வரப்பிரசாதம் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கண்காட்சியில், தமிழ் இதழியல் வரலாற்றைச் சித்திரிக்கும் பத்திரிகைகள், ஒளிப்படங்கள், ஒளிநாடக்கள் மற்றும் அகலத்திரைக் காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் உதயகுமார் ஆகியோரும்,

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சந்தேகங்களை கேட்டு அறிந்து கொண்டனர்.

தொடர்ந்து பிற்பகல் 12 மணிக்கு 'வெகுஜன கலாசாரம்' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் விரிவுரையாளர் த.கிருத்திகா கருத்தரங்கை நிகழ்த்தினார். பி.ப. 1 மணிக்கு 'சமூகத்தில் ஊடகங்களின் தாக்கம்' எனும் தலைப்பில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையப் பயிற்றுவிப்பாளர் அ.சபேஸ்வரன் கருத்துக்களை வழங்கினார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 'புதிய ஊடகத்தில் பத்திரிகையியல்' எனும் தலைப்பில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குனர் தே.தேவானந் கருத்தரங்கை நிகழ்த்தியதுடன், பிற்பகல் 12 மணிக்கு, 'ஆங்கிலக் கல்வியும் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சியும்' எனும் தொனிப்பொருளில் தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் ஆயர் அருட்கலாநிதி ஜெபநேசன் உரையாற்றினார்.

# சுன்னாகத்தில் திருடர்கள் அட்டகாசம்

(சிகரம்)

சுன்னாகம் பகுதியில் சில தினங்களாக திருடர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் மட்டுமன்றி பகல்வேளைகளிலும் இவர்களின் அட்டகாசம் ஆரம்பித்துள்ளது.

நகை, பணங்களைக் கொள்ளையடித்து வந்தவர்கள், தற்போது பொது இடங்கள் மற்றும் தோட்டப் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் குழாய் பைப்புக்கள், அதில் காணப்படும் உலோகத் துண்டுகளுக்காக களவாடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், தினம்தினம் தாம் பயந்தநிலையிலேயே வாழ்ந்துவருவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# நாவற்குழி - கேரதீவு வீதி துரித கதியில் புனரமைப்பு

(சிகரம்)

17 கிலோமீற்றர் நீளமான நாவற்குழி - கேரதீவு வீதியின் புனரமைப்புப் பணிகள் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் அனுசரணையுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மிக துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக இவ்வீதியில் காணப்பட்ட மதகுகள் மற்றும் பாலங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அதேவேளை கோவிலாக்கண்டி சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட காப்பெற் வீதி அமைக்கும் பணியானது தற்போது மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய வீதியையும் கடந்துள்ளது.


தற்போது கீரைவாய்க்கால் வீதியை இணைக்கும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பாலத்தை (பெரிய மதகு) புனரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் தனங்கிளப்புச் சந்தியில் இருந்து கேரதீவுப் பக்கமாக சுமார் நான்கு கிலோமீற்றர் தூரம் வரை காப்பெற் வீதி அமைக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.



# மெய்தான் பாருங்கோ...

## 'வடுக்கள்'



**அண்டைக்கு** ஒருக்காப் பாருங்கோ! வஸ்தியன் சந்தியில ஒரு அலுவலை முடிச்சுக்கொண்டு, ஆஸ்பத்திரிறோட்டால ரவுணுக்குப் போய்க்கொண்டிருந்தனான். இடையில கன்னியர் மடச் சந்திக்கு கிட்டுமானமாக ஒரு பொம்புளைப் பிள்ளை எனக்கு முன்னால போய் கொண்டிருந்தாள். அந்தப்பிள்ளைக்கு தொடையோடை காலில்லை. ரண்டு கையுக்கையும் 'கிளச்செஸ்சை' (ஊன்றுகோல்) வைச்சு ஊண்டிக் கொண்டு போய்க்கொண்டிருந்தாள். எனக்கு அந்தப் பிள்ளையைப் பாத்ததும் மனசு பெரிய அந்தரமாகவும், அந்தப் பிள்ளை மீது ஆதங்கமாகவும், அனுதாபமாகவும் வந்தது.

வேகமாக நடந்து போய் அந்தப் பிள்ளையிட்டை கதை கேட்டன்.

பிள்ளை நீங்கள் எவடம் இருக்கிறியள்... எண்டு. பிள்ளை என்னைத் திரும்பிப்பாத்தாள். பிள்ளையின்ர முகத்தில எள்ளும்; கொள்ளும் வெடிக்கிற மாதிரியிருந்தது. தப்பா நினையாதையம்மா... நீர் வன்னிப் போருக்கை அம்பிட்டிருப்பியோ தெரியாது எண்டு கேட்டன்... எண்டு நான் சொல்ல, அதுக்கு அவள், அப்பிடி அம்பிட்ட தெண்டாலும் என்னில அனுதாபம் காட்டப் போறியளே? எனக்கு உங்கட அனுதாபம் தேவையில்லை! அங்கால போங்கோ... எண்டு கோபத்தில சொல்லிப் போட்டு விறுக்கு விறுக்கெண்டு ஊண்டுகோலை ஊண்டி நடக்கத் தொடங்கினாள் பாருங்கோ!

எனக்கு அவளின்ர மனநிலையைப் புரியஞ்சுகொள்ளக் கூடியதாக இருந்துது. இளம்வயசு. ஒருகால் இல்லை. பிள்ளையின்ர மனசில ஏதோ ஒரு பெரியதாக்கம் நடந்திருக்கெண்டது எனக்கு விளங்கிக்கொள்ள, நானும் வன்னிப் பக்கம்தான் பிள்ளை... எண்டு சொன்னதும் அவள் சடாரெண்டு நிண்டு என்னைத் திரும்பிப் பாத்தாள்.

என்னை மன்னிச்சிடுங்கையா... எண்டு சொல்லிப் போட்டு என்னோட கூட நடந்து கொண்டே அவள் தன்ர கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

வன்னியில நடந்த சண்டேக்கை 'பிள்ளைபிடிக்காரர்' என்னைப் பிடிச்சுக்கொண்டு போன இடத்தில கிபிர்க்காரன் குண்டடிச்சு தொடையோட ஒருகால் போயிட்டுது. அதுக்குப்பிறகு...? சொல்லிப்போட்டு அவள் என்னைத் திரும்பிப் பாத்தாள். அதுக்குப் பிறகு... என்ன நடந்ததெண்டு அவள் சொல்லவுமில்லை ; நான் கேட்கவுமில்லை..

ஐயா எங்கட அவலங்களும் கண்ணீரும் எங்களோடை இருக்கட்டும் எண்டுதான் நான் விரும்புறன். எங்கட கதையை மற்றவைக்கு சொல்லி அனுதாபம் தேட நான் விரும்பேல்லை. ஆரம்பத்தில இரக்கப்படுகிறமாதிரிக் காட்டிக்கொண்ட ஆட்களெல்லாம், இப்ப இகழ்ச்சியாகவும் ஏளன்மாகவும் பாக்கினம் ஐயா! நாங்கள் இப்ப ஒருத்தருக்கும் மனிசராத் தெரியேல்லை. 'வடுக்கள்' சுமந்து ஒதுக்கப்பட்ட ஆட்களாக வாழுறம்... எண்டு அவள் சொல்லிக்கொண்டுவர... என்ர நெஞ்சுக்குள்ள ஏதோ முட்டி நிரம்பி ஊதி உடைக்கிறமாதிரி... ஒரு உணர்வு வந்துது பாருங்கோ!

இவளைப்போல இன்னும் எத்தனை பேர்... எங்களுக்குள்ள இருக்கினம்... எண்டதும் எவருக்கும் சரிவரத் தெரியாது. காலில்லாமல்... கையில்லாமல்... கண்ணில்லாமல்... செவிடாக... முடமாக... வாழுற மனிசரைப்பற்றி... இந்தப்பிள்ளை சொன்ன மாதிரி ஆரம்பத்தில அனுதாபம் காட்டின ஆட்களெல்லாம் இப்ப அலட்சியப்படுத்தத் தொடங்கியிட்டினம்... எண்டது மறுக்கேலாத உண்மை கண்டியளே!

இந்த 'வடுக்களை' நாங்கள் விரும்பிப்போய் வேண்டிக்கொண்டதில்லை. போர் தந்த பரிசெண்டு ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. போருக்கை பாதிக்கப்பட்டு அங்கவீனமிழந்து... அவலட்சணமாத் தெரியுற நாங்கள், எத்தனை வடுக்களைச் சுமந்து வாழுறம்... எண்டது வன்னியில பாதிக்கப்பட்ட சனங்களுக்கு மட்டும்தான் புரியும் பாருங்கோ!

கிளைச்செஸ்சை அவள் ஊண்டி நடக்கிறதை றோட்டால போறவை ; வாறவை புதினமாப் பாக்கிறதை அவள் உணர்ந்திருக்கவேணும்போல. எங்கட 'ஊனம்' இப்ப ஒரு காட்சிப் பொருளாகவும் போயிட்டுது ஐயா... எண்டு அவள் சொல்ல எனக்கு மனசு வலிச்சுது பாருங்கோ!

ஏனெண்டு கேட்கிறியளே! சண்டைநேரம் முள்ளிவாய்க்கால் தொங்கல்ல நான், மனிசி, பிள்ளையோடை இருந்த நேரம் ஷெல் அதிர்வில என்ர காதும் கொஞ்சம் பிரச்சினையாப் போச்சுது. மற்றவை கதைக்கிறது சத்தமாக்கேட்டாலும், அவையளின்ர வாத்தையளை விளங்கிக்கொள்ளுறது கொஞ்சம் கஷ்டமாக்கிடக்குது. இதுவும் நான் விரும்பாத ஒருஊனமாகி... 'வடுவாகி' என்ர வாழ்க்கையை அவமானப்படுத்திக்கொண்டு இருக்கிறதால, தொடையோடை கால் இல்லாமல் போன அந்தப் பிள்ளையின்ர மனஉணர்வுகளை என்னால புரிஞ்சு கொள்ள முடியுஞ்சுது.

ஆனா, மற்றவையளால...?

பாம்பின்ர காலைப் பாம்புதான் அறியும் எண்டுசொல்லுறதும் பொய்யில்லை ; மெய்தான் பாருங்கோ!

**- சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# சமாதான முயற்சி தாமதமடைய சந்திரிகாவின் அரசே காரணம்

## – குற்றம் சாட்டுகிறார் ராஜித சேனாரட்ன



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நடவடிக்கைகளினாலேயே சமாதான முயற்சிகள் கால தாமதமாகியதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தியிருக்காவிட்டால், சமாதானத்தை எட்டியிருக்க முடியும்.

நாட்டில் தேர்தல் அதிகாரத்தின் மூலம் ஆட்சி பீடமேறிய அரசாங்கத்தை நீங்கள் காலில் இழுத்தீர்கள். ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு தடையேற்படுத்தி இருக்கா விட்டால் முன்னரே நாட்டில் சமாதானம் ஏற்பட்டிருக்கும் என ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நடைபெற்ற சம்பாசணை ஒன்றின் போது ராஜித இதனைக் குறிப்பிட்டுள்ளார். பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் மகளின் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட போது இருவருக்கு இடையில் இந்த சம்பாசணை நடைபெற்றுள்ளது.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமது கட்சி ஆதரவாளர்களை பழிவாங்கியதாக சந்திரிகா குற்றம் சுமத்தினார்.

சுமார் 1400 கட்சி ஆதரவாளர்கள், அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டனர். மேலும் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன என சந்திரிகா ராஜிதவிடம் தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி கலைப்பதற்கு எடுத்த தீர்மானம் சரியானதே என அவர் குறிப்பிட்டார். இந்த திருமண விருந்துபசாரத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மழை நீர் சேமிப்பு குளம் காரைநகரில் திறப்பு



காரைநகர் வலந்தலை சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்டு வந்த மழைநீர் சேமிப்புக் குளம் நிறைவு பெற்றுள்ளது. இப்புதிய குளத்தினை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த வியாழக்கிழமை அன்று பால் ஊற்றி பாவனைக்கு தயாராக திறந்து வைத்தார். இக்குளத்தில் சேமிக்கப்படும் மழைநீர் மூலம் காரைநகர் மக்கள் நன்னீர் வளத்தை மேம்படுத்தி பெரும் பயனடைவார்கள் என்றும் இப்பணியின் மூலம் காரைநகர் மக்கள் பெரு மகிழ்ச்சியடைந்துள்ளார்கள் என்றும் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் பிரதேச அமைப்பாளருமான வி.கண்ணன் தெரிவித்தார்.

அத்துடன் லண்டன் காரை நலன்புரிச் சங்கத்தினரால் கொளமுதல் செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட களபூமி விளானையில் தோட்டக்காணியில் மற்றுமோர் மழைநீர் சேமிப்பு குளம் அமைக்கும் பணியினையும் ஆரம்பித்து வைத்தனர்.(10)

# கலைக்கப்பட்ட மாகாணசபை முதலமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு

மாகாணசபைகள் கலைக்கப்பட்டபோது முதலமைச்சர்களாக இருந்தவர்களையே கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைகளுக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர்களாக மீண்டும் நிறுத்தவுள்ளதாக ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு கூறியுள்ளது.

இந்த தீர்மானத்துக்கமைய சப்ரகமுவ முதலமைச்சர் மஹிபால ஹேரத், வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேமலால் திஸாநாயக்க மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் தத்தம் மாகாணங்களில் ஐ.ம.சு.கூ. அணிகளுக்கு தலைமை தாங்குவர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுடன் அவற்றுக்காக ஒதுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை பற்றி பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளதாக ஐ.ம.சு.கூட்டமைப்பின் செயலாளரான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஐ.ம.சு.கூட்டமைப்பில் பெரிய கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, இந்த தேர்தலுக்காக புனரமைக்கப்பட்டுள்ளது என்று கூறிய சுசில் பிரேமஜயந்த, முன்பு முதலமைச்சர்களாக இருந்தவர்களே மீண்டும் பிரதம வேட்பாளர்களாக நியமிக்கப்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

# சர்வதேச போதைப் பொருள் வியாபாரி ஒரு கோடி 44 இலட்சத்துடன் கைது

சர்வதேச போதைப் பொருள வியாபாரம் மற்றும் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்தலுடன் தொடர்புடைய நபருக்கு உதவி ஒத்தாசை புரிந்ததாக கூறப்படும் நபர் ஒருவர் ஒரு கோடியே 44 இலட்சத்து 84 ஆயிரம் ரூபா பணத்துடன் குற்றப்புலனாய்வு திணைக்களப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் நீர்கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது, அவரை எதிர்வரும ஜூலை மாதம் 4 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீர்கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா யு.ஜயசூரிய உத்தரவிட்டார்.

நீர்கொழும்பு - கொச்சிக்கடை ஏத்தகால பிரதேச்தைச் சேர்ந்த இச்சந்தேக நபரை குற்றப்புலனாய்வு திணைக்களப் பொலிஸார் கைது செய்த போது சந்தேக நபரின் வீட்டு கட்டிலின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இப் பணம் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். இவர் கடற்படையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உரிமையாளரற்ற காணிகள் பிரதேச செயலர் பொறுப்பில்

டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் நிலவும் உரிமையாளர்கள் அற்ற காணிகளை பிரதேச செயலாளர்களின் பொறுப்பின் கீழ் கொண்டுவருவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

டெங்குக் காய்ச்சல் அதிகளவில் பரவுவதற்கு இவ்வாறு கவனிப்பார் அற்றுக் காணப்படும் காணிகளும் காரணமாக அமைந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ரஞ்சித் படுவந்துடாவ தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு இவ்வாறான காணிகளை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# "துர்க்கா துரந்தரி"

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



எங்கு தர்மம் இருக்கிறதோ அங்கு தான் வெற்றி என்பது மகா பாரதக் கதை. தர்மத்திலிருந்துதான் பொருள், இன்பம் முதலிய அனைத்தும் விளைகின்றன.

நம் நாட்டில் இத்தகைய தர்மத்தைப் போற்றி, திருக்கோயிற் கடமைகளை உள்ளத்தில் ஏற்றி அரும்பணி ஆற்றுபவர்கள் ஒரு சிலர் இருப்பது நாடு செய்த தவப்பயனாகும்.

### சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 4 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று

திருக்கோயில்கள், அன்னசத்திரங்கள், பொதுக்கிணறுகள், இலவசக் கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள், தர்ம ஸ்தாபனங்கள் யாவும் இவ்வுண்மை யை எடுத்துக் காட்டுகின்றன.

ஒவ்வொரு தர்மத்திலும் எப்படியாவது தமது பங்கும் இருக்கவேண்டுமென்று பலர் விரும்புவது கண்கூடு.

"தர்மம்" என்ற சொல் பலவித பொருட்களைக் கொண்டது. பொதுவாக வேதங்களும், அவற்றைத் தழுவிய நூல்களும் "எதைச் செய்" என விதிக்கின்றனவோ அவைதான் தர்மம். எதைச் செய்யாதே என விதிக்கின்றனவோ அவைதான் அதர்மம்.

தர்ம காரியங்களில், மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது திருக்கோயில் கட்டுதலும், திருப்பணி செய்தலுமாகும்.

இவற்றைத் தனிப்பட்ட ஒருவர் செய்ய முடியாது. மகா சக்தி வாய்ந்த மகான்களாலும், தெய்வ உள்ளம் படைத்த மாமன்னர்களாலுமே இவை செய்யப்படக் கூடியவை என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வாலய வரலாறும் மகான்களின் ஆசி பெற்ற சிறப்பைப் பெற்றது. கீரிமலை மாவட்டபுரம் ஆகிய பழமை வாய்ந்த தலங்களுடன் தொடர்பு பட்ட பூர்வீகம் இவ்வாலயத்திற்கு உண்டு.

பத்து ஆண்டுகள் காசியிலிருந்து துர்க்கை உபாசனை புரிந்த ஒரு பெரும் ஞானியால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது.

கொழும்புத்துறை முனிவர் தவயோக சுவாமிகளின் நல்வரவுக்கு இடமளித்த ஆலயம் இது. ஸ்ரீ கரிதாஸ்.கிரி சுவாமிகளின் அபிமான ஷேத்திரம் இது. இன்னும் பல ஆத்மீக சக்திகளால் பொலிவு பெற்ற இக் கோயில் இன்று பல்லாயிரக்கனக்கான மக்களின் வருகையாலும் வழிபாட்டாலும் சிறப்புப் பெற்றுள்ளது.

இங்கு வருகைதரும் இலட்சோப இலட்சம் மக்களின் ஆதரவு திரண்டு இன்றைய தினத்தில் மகாகும்பாபிஷேகம் காணும் புண்ணியம் நம்மைக் கிட்டியுள்ளது.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் நினைக்கத் தோன்றுகின்றது.

அன்னையின் திருக்கோயில் த்னது சின்னமாக வானுயர் கோபுரத்தைக் கொண்டு மிளிர்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

"கோபுரஞ்சூழ் மணிமாடக்
கோயில் கண்டேன்
குனித்தபல அலங்கார
வளைவு கண்டேன்
தேவர்களும் உவந்தேத்தும்
ஸ்தூபி கண்டேன்
திருமுறைகள் வேதமொடு
ஒலிக்கக் கண்டேன்
ஏவல்புரி ஏந்திழையார்
எழிலும் கண்டேன்.
இளைஞர் பணி சரியைவழி
இயற்றக் கண்டேன்
பாவலர்கள் பண்ணுரைப்
பாடக் கண்டேன்
பராபரையின் சந்நிதியில்
யாவும் கண்டேன்"

என்பது சிறியேன் அனுபவமாகும். இவ் வனுபவம் இங்கு வந்து வழிபாடு செய்யும் அனைவருக்கும் பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

கும்பாபிஷேகத்தின் பயன்
புல்லினால் வருடம் ·கோடி
புதுமண்ணால் பத்துக் கோடி
செல்லுமா ஞாலந் தன்னில்
செங்கல்லால் நூறு கோடி
அல்லியங் கோதை பாகன்
ஆலயம் மடாலயங்கள்
கல்லினால் கட்டி வைத்தோர்
கயிலைவிட்டகலார் அன்றே"

கா.சிவபாலன்

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

| 02 | T | II |
|---|---|---|

பௌதிகவியல் - II

Physics - II


# கல்வி முரசு


நேரம் : 
மணித்தியாலம்

*(g= 10N kg-1)*

1. பேருந்து ஒன்று கிடையான நேரான வீதி வழியே 20 $m s^{-1}$ வேகத்துடன் பயணிக்கின்றது.

a) பேருந்தின் எஞ்சினால் சில்லுகளின் மூலம் வீதிக்கு எவ்வகையான விசை பிரயோகிக்கப்படுகின்றது.




b) பேருந்தானது பின்சில்லு செலுத்தியாக (Real wheel) இருப்பின் பேருந்து பின் சில்லும் (R) இலும் முன் சில்லு (F) இலும் தாக்கும் கிடை விசைகளைக் குறித்துக் காட்டுக.

c) ஒவ்வொரு விசையும் மற்றைய விசையை சமப்படுத்துவதன் மூலம் பேருந்து மாறாவேகத்துடன் பயணிக்குமா? உமது விடையை விளக்குக.

..............................................................................................

..............................................................................................

d) வீதியானது ஒப்பமானதாயின் பேருந்தானது வீதியில் பயணிக்க முடியுமா? காரணம் தருக.

e) வீதியானது 5 m ஆரையுடைய ஓர் கிடையான வளைவுடையது. வீதிக்கும் சில்லுகளுக்குமிடையிலான உராய்வுப் குணகம் 0.5 ஆயின் பேருந்தானது வளைந்த பாதை வழியே பயணிக்கக் கூடிய உயர்கதி யாது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

f) பஸ்வண்டி வளைவை அடையும் போது சாரதி வீதி சமிக்கை விளக்கை காண்கிறான். அவன் தடுப்புக்களை பிரயோகிப்பதன் மூலம் 5m $s^{-2}$ என்னும் மாறா அமர்முடுகலை நிலை நிறுத்துகின்றான். தடுப்புக்களைப் பிரயோகிக்க முன் பஸ்வண்டி பாதுகாப்பாக வளைவில் பயணிப்பதற்கு பேருந்துக்கும் வளைவு ஆரம்பிக்குமிடத்திற்குமிடையேயான மிகக் கிட்டிய தூரம் யாது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

g) பஸ்வண்டி அதன் இழிவுக் கதியில் பாதையில் பயணிக்கின்றது. பேருந்தின் கூரையில் இழையினால் தொங்கவிடப்பட்ட பை ஒன்று நிலைக்குத்துடன் அமைக்கும் கோணம் யாது?

..............................................................................................

..............................................................................................

h) வளைந்த பாதையில் மாறாக்கதியுடன் பஸ்வண்டி பயணிக்கும் போது அதன் உந்தம் தொடர்ந்து மாறிலியாகப் பேணப்படுமா? உமது கிடையை விளக்குக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

i) வாகனங்கள் வழுக்கிச் செல்லமுடியாதவாறு பொதுமான உராய்வு வீதிக்கு உள்ளது. ஆனால் உயர்கதியில் செல்லும் வாகனங்கள் கவிழலாம். கவிழ்வதை தீர்மானிக்கும் இரு குணங்கள் யாவை?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................


j) வளைவுகளில் ஆபத்தைக் குறைப்பதற்கு என்ன தொழிநுட்பமுறை பயன்படுத்தப்படுகிறது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

02.




இழிவு விலகல் கோணம் காண்பதற்கான பரிசோதனை ஒன்றில் மாணவன் ஒருவன் முகம் AB இற்கு அண்மையில் ஊசி P ஐ ஊன்றுகின்றான். ஊசியின் நிலை திருப்திகரமானதல்ல.

a) அதனை திருத்தி அந்தநிலையினை $P^1$ எனக் குறிக்க.

b) i) அவதிநிலையில் $P^1$ இன் விம்பத்தின் முகம் AC அல்லது BC யினூடாகவா அவதானிப்பீர்?

..............................................................................................

..............................................................................................

ii) ஏன் மற்றைய முகம் பொருத்தமற்றதாகும்? காரணம் தருக.

..............................................................................................

..............................................................................................

c) i) உம்மிடம் மேலும் இரு ஊசிகள் $P_1$, $P_2$ தரப்பட்டுள்ளன. அவதிநிலையில் தெறிப்படையும் கதிரின் வெளிப்படுபாதையை காண்பதற்கு எவ்வாறு பயன்படுத்துவீர்?

..............................................................................................

..............................................................................................

ii) $P_1$, $P_2$ இன் நிலைகளை மேலுள்ள வரைபில் குறித்து காட்டுக.

..............................................................................................

d) அவதிக் கோணம் C ஐ காண்பதற்கான அமைப்புக்களை மேலுள்ள வரைபில் குறித்துக் காட்டுக.

e) உம்மிடம் ஓர் கண்ணாடி வழுக்கித்தட்டும் சிறிதளவு திரவமும் உமக்கு தரப்பட்டுள்ளன. கண்ணாடி திரவ இடைமுகத்திற்கான அவதிக்கோணம் $C^1$ ஐ காண்பதற்கு மேற்கூறப்பட்ட பரிசோதனையை எவ்வாறு மேலும் விருத்தி செய்வீர்?

..............................................................................................

..............................................................................................


..............................................................................................

f) அவதிக்கோணம் C ஆனது $42^0$ என அளக்கப்பட்டது ஆயின் அரியம் ஆகப்பட்ட பதார்த்தத்தின் முறிவுச்சுட்டி n ஐ காண்க. ($\sin 48^0 = 0.6691$)

..............................................................................................

..............................................................................................

03. உருவில் காட்டப்பட்டுள்ள சிறிய இரச நிரல் ஒன்றினால் சிறைபிடிக்கப்பட்ட வளி நிரல் ஒன்றைக் கொண்டுள்ள ஒரு முனை மூடப்பட்ட ஒடுங்கிய கண்ணாடிக் குழாய் ஒன்று மாணவன் ஒருவனுக்கு தரப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு சுடரடுப்பு, ஒரு முக்காலி, ஒரு கம்பி வலை ஆகியவை தரப்பட்டுள்ளது. அறை வெப்பநிலையில் வளிநிரலினதும், இரசநிரலினதும் நீளங்கள் 1cm உம், 40cm உம் ஆகும். இக்குழாயினது நிலைக்குத்தாக வைக்கப்பட்ட நிலையிலே, வளிநிரலின் நீளம்(l) இனது வெப்ப நிலை (θ)உடனான மாறலை அளவிடும்படி அம் மாணவன் கேட்கப்படுகின்றான்.



a) இவ்வமைப்பைப் பயன்படுத்தி சாள்ஸின் விதியைப் வாய்ப்புப் பார்ப்பதற்கு வேறு தேவையான முக்கிய ஆய்கருவிகள் யாவை?

01)..........

02)..........

03)..........

04)..........

b) அவன் அளவிடும் வெப்பநிலையானது வளிநிரலின் வெப்பநிலை என உறுதிப்படுத்துவதற்கு அவன் பின்பற்ற வேண்டிய பரிசோதனை முறை யாது?

..........

..........

..........

..........

e) அடைக்கப்பட்ட வளிநிரலைச் சீராக வெப்பமேற்றுவதற்கு அவன் மேற்கொள்ளும் பரிசோதனை முறை யாது?

..........

..........

..........

d) வளியை சிறைப்படுத்துவதற்கு இரச நிரலுக்கு பதிலாக செறி $H_2SO_4$ ஐப் பயன்படுத்துவது சாலச்சிறந்தது என் ஒரு மாணவன் கூறுகின்றான். அவனது கூற்றிலுள்ள அனுகூலம், பிரதிகூலம் என்பவற்றைத் தருக.

அனுகூலம்:..........

..........


பிரதிகூலம்:..........

..........

e) θ,l ஆகியவற்றிற்கு இம்மாணவன் பின்வரும் தரவுகளைப் பெற்றான்.

| θ (°C) | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 |
|---|---|---|---|---|---|---|---|
| $\ell$ (cm) | 29 | 30 | 30 | 32 | 33 | 35 | 35 |

i) 0 (°C) யையும் O cm ஐயும் உற்பத்தியாகத் தெரிவு செய்து L எதிர் θ வரைபை வரைக.




ii) இவ் வரைபில் இருந்து O°Cயில் அடைக்கப்பட்ட வளியின் நீளத்தை துணிக.

..........


iii) வரைபில் இருந்து அடைக்கப்பட்ட வளியின் மாறா அமுக்கத்தில் கனவளவு விரிவுக் குணகத்துக்கான பெறுமதியையும் பெறுக.

..........

f) L இனை, தனிவெப்பநிலை T உடனான மாறலைக் காட்டுவதற்கு பருமட்டாக வரைபை வரைக.



**04.** ஓர் முடிய உலோக தடத்தை நோக்கி, கீழ் காட்டிய படத்தில் காட்டியவாறு ஓர் சட்டக்காந்தம் அசைக்கப்படுகின்றது. இதன் போது ஓர் தடத்தில் மின் னோட்டம் தூண்டப்படும்.




a) தூண்டப்பட்ட மின்னோட்டத் திசையை அறிவதற்கு நீர் பயன்படுத்திய விதியை கூறுக.

..........

..........

..........

..........

b) மேலுள்ள உருவில்

1) தடத்தின் முகங்களின் முனைவுத் தன்மையைக் குறித்துக் காட்டு.

2) தூண்டப்பட்ட மின்னோட்டத் திசையையும் குறித்துக் காட்டுக.


c) பகுதி (a) யில் நீர் கூறிய விதி எவ்வாறு சக்திக் காப்பு விதியுடன் தொடர்புட்டது?

..........

..........

..........

d) கீழ் உள்ள உருவானது கிடையான கடத்தும் செவ்வகவடிவிலான கம்பித் தடமாகும். இதன் ஒரு பகுதி நிலைக்குத்தான் கடதாசித்தளத்திற்கு வெளிநோக்கிய சீரான காந்தப் பாய அடர்த்தி B ஐ உடைய பிரதேசத்திலிருந்து வெளிநோக்கிய கிடையாக மாறாக்கதி V உடன் இழுக்கப்படுகின்றது.




i) தடத்தில் மின்னோட்டத் திசையை குறித்துக் காட்டுக.

ii) அத்துடன் PQ,QR,PS ஆகிய பகுதிகளில் தாக்கும் விசைகளின் திசைகளையும் சுட்டிக் காட்டுக.

iii) இப்பகுதிகளில் தாக்கும் விசைகளின் பருமன் கூடுமா, குறையுமா, மாறுபடாதா என்பதைக் கூறுக.

பகுதி PQ :- ..........

பகுதி QR :- ..........

பகுதி PS :- ..........

iv) $V=6ms^{-1}$, $B=0.5T$ கம்பியின் தடை 0.5 $\Omega^{-1}$ ஆகவும் இருக்கும் போது தடத்தில் தூண்டப்பட்ட மின்னோட்டம் யாது?

..........

..........

..........

v) பகுதி d (iv) இல் கூறப்பட்ட மின்னோட்டம் பாயும்போது தடத்தை இழுப்பதற்கு பிரயோகிக்கப்பட்ட விசையின் பருமன்.

..........

..........

..........

vi) அதனை கையால் பிடித்து இழுப்பதனால் தடத்தில் உள்ள மின்னோட்டத்தில் மாறுதல் ஏற்படுமா? விளக்குக.

..........

..........

..........

# முகநூலை பயன்படுத்தி மும்பை மீது தாக்குதல்

மும்பை தாக்குதலில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்பட்ட அபு ஜிந்தால் என்பவரை டில்லி பொலிஸார் அண்மையில் கைது செய்தனர்.

தற்போது அபு ஜிந்தால் பற்றிய சில திடுக்கிடும் புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள ஜிந்தால் லக்ஷர் இ தொய்பா இயக்கத்தில் உள்ள இந்தியர்களில் முக்கிய இடத்தில் இருப்பவன் ஆவான்.

அவனது உண்மையான பெயர் ஜபுதீன் அன்சாரி எனவும், இவனுக்கு 10 முறைகளில் கூட்டணி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேஸ்புக்கில் 9 பெயர்களிலும், பிரபல சமூக வலைத்தளங்களில் ஈமெயில் மூலமும் இவன் தனது இயக்கத்திற்கும் தாக்குதல் பணிகளுக்கும் ஆட்களைத் தேடி வந்துள்ளான்.

தற்போது இவனது அனைத்து பதிவுகளும் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டீஸ்கர் காட்டுப்பகுதி மோதலில் 20 மாவோயிஸ்டுகள் உயிரிழப்பு

(தண்டவத்தா)

சட்டீஸ்கர் மாநிலம் காட்டுப்பகுதியில் மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் நடத்திய தாக்குதலில் 20 மாவோயிஸ்டுகள் உயிரிழந்ததுடன் 6 படை வீரர்கள் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் பலியான மாவோக்களின் எண்ணிக்கை அதிகமெனவும் பலரின் உடல்கள் காட்டுப் பகுதியில் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



அத்துடன் உயிருடன் பிடிக்கப்பட்ட 2 மாவோக்கள் தலைநகர் ராய்ப்பூருக்கு பலத்த பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மாவோக்கள் சுதந்திரமாக சுற்றித்திரியும் சில்கர் என்ற காட்டுப்பகுதியில் இந்த தாக்குதல் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடந்துள்ளது.

கடந்த 2010 இல் சி.ஆர்.பி.எப். வீரர்கள் 75 பேரை மாவோக்கள் அதிரடி தாக்குதல் நடத்தி கொன்றனர். இந்த சம்பவம் நடந்த சிந்தனய்யர் என்ற காட்டுப்பகுதி அருகே இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இந்தியச் செய்திகள்

# ஹைப்பர் சொனிக் ஏவுகணை 2017 இல் பரிசோதனையில்




(மொஸ்கோ)

இந்திய ரஷ்ய கூட்டுத்தயாரிப்பில் உருவாகி வரும் பிரம்மோஸ் ஹைப்பர் சொனிக் ஏவுகணை 2017ஆம் ஆண்டில் சோதித்து பார்க்கப்படும் என பிரம்மோஸ் நிறுவன இயக்குநர் சிவதாணுப்பிள்ளை தெரிவித்துள்ளார்.


ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நிருபர்களிடம் பேசிய அவர், பிரம்மோஸ் ஹைப்பர்சொனிக் ஏவுகணையை தயாரிக்க இன்னும் 5 ஆண்டுகள் தேவைப்படும்.

தற்போது நிலம், நீர் மற்றும் ஆகாய வழியில் தாக்கக்கூடிய மூன்று வகையான பிரம்மோஸ் ஹைப்பரசொனிக் ஏவுகணைகளை உருவாக்கும் வகையில் சோதனைகள் நடந்து வருகின்றன. புதிதாக உருவாக்கப்படும் ஹைப்பர் சொனிக் ஏவுகணைகள் இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு மட்டுமே வழங்கப்படும். வேறு எந்த நாட்டிற்கு இத்தகைய ஏவுகணைகள் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது

இந்திய மற்றும் ரஷ்ய தயாரிப்பில் உருவாகியுள்ள பிரம்மோஸ் சூப்பர் சொனிக் ஏவுகணை 290 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும் வல்லமை கொண்டது. இதில் 300 கிலோ வரை வெடிபொருட்கள் கொண்டு செல்ல இயலும்.



**ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பாக போட்டியிடவுள்ள பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்ததைக் காணலாம்**



**உளவு பார்ப்பதற்காக சென்றதாகத் தெரிவிக்கப்பட்டு பாகிஸ்தான் சிறையில் கடந்த 31 வருடங்களாக அடைக்கப்பட்டிருந்த சுர்ஜித்சிங் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட நிலையில் அவர் அழைத்துவரப்படுவதனையும், அவரது குடும்பத்தினருடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா கலந்துரையாடுவதையும் காணலாம்.**

# ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு இன்று சென்னை வரும் பிரணாப்

இந்தியாவின் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜூலை மாதம் 19ஆம் திகதி நடைபெற உள்ளது. ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் முன்னாள் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி வேட்பாளராக நிறுத்தப்பட்டு உள்ளார். அவரை எதிர்த்து தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பி.ஏ.சங்மா போட்டியிடுகிறார்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இருவரும் நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தனர். அதனைத் தொடர்ந்து கூட்டணி மற்றும் ஆதரவு கட்சி தலைவர்களை சந்தித்து பிரணாப் முகர்ஜியும், பி.ஏ.சங்மாவும் வாக்கு சேகரித்து வருகின்றார்கள்.

இந்த நிலையில், ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பிரணாப் முகர்ஜி இன்று சென்னை வருகிறார். சென்னை விமான நிலையத்திற்கு மாலை 4 மணிக்கு வரும் பிரணாப் முகர்ஜிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அங்கிருந்து புறப்படும் அவர், தி.மு.க. தலைவர் கலைஞரை கோபாலபுரத்தில் உள்ள இல்லத்தில் சந்தித்து ஆதரவு திரட்டுகிறார். பின்னர், அடையாறில் உள்ள பார்க் ஷெராட்டன் ஹோட்டலில், தி.மு.க. எம்.பி., எம்.எல்.ஏ.க்களையும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய எம்.பி.' எம்.எல்.ஏ.க்களையும் அவர் சந்தித்து ஆதரவு திரட்ட உள்ளார்.

# கார் விபத்தில் அமிதாப்பச்சன் பலியென வதந்தி பரப்பிய இணையத்தளங்கள்

அமெரிக்காவில் இடம்பெற்ற கார் விபத்தில் இறந்ததாக அமிதாப்பச்சன் பற்றி இணையதளங்கள் வதந்தியைப் பரப்பியுள்ளன.

இந்தி நடிகர் அமிதாப் பச்சன் அமெரிக்காவில் உள்ள மோரிஸ் டவுனுக்கும் ரோஸ் வெல்லுக்கும் இடையே காரில் சென்று கொண்டு இருந்தார்.

அந்த கார் அமிதாப்பச்சனின் நண்பருக்கு சொந்தமானதாகும். 95 கிலோ மீற்றர் வேகத்தில் அது சென்று கொண்டு இருந்தது. அப்போது கார் திடீரென நிலை தடுமாறி ரோட்டின் நடுவே உள்ள சென்டர் மீடியனில் மோதி கவிழ்ந்தது.

பல தடவை கார் உருண்டது. இந்த விபத்தில் காரில் இருந்த அமிதாப்பச்சன் அந்த இடத்திலேயே பலியானார். அவர் அணிந்திருந்த அடையாள அட்டையை வைத்து அமிதாப்பச்சன் என பொலிஸார் உறுதி செய்தனர் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த செய்தி சில நிமிடங்களிலேயே நூற்றுக் கணக்கான இணைய பக்கங்களில் பரவியது.

அமிதாப்பச்சன் நலமாக இருக்கிறார் அவரைப் பற்றி வெளியான செய்திகள் வதந்திதான் என்று அமிதாப் தரப்பில் மறுக்கப்பட்டு உள்ளது. இந்த வதந்தியால் அமிதாப்பச்சன் குடும்பத்தினர் அதிர்ச்சியாகி உள்ளனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இளையராஜாவை அடுத்து ரஹ்மானும் ஒலிம்பிக்கில்

(லண்டன்)

இசைஞானி இளையராஜாவைத் தொடர்ந்து இசைப் புயல் ஏ.ஆர். ரஹ்மானின் பாடலும் ஒலிம்பிக் தொடக்க விழாவில் இடம் பெறவுள்ளது.

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் இசைஞானி இளையராஜா முன்பு இசையமைத்த ராம் லட்சுமண் திரைப்படத்தில் இடம் பெற்ற நான்தான் நொப்பண்டா என்ற பாடல் இடம் பெறுகிறது.

இந்த நிலையில், தற்போது இசைப் புயல் ஏ.ஆர். ரஹ்மானின் இசையும் ஒலிம்பிக் தொடக்க விழாவில் இடம் பெறுகிறது.

திரைப்பட இயக்குநர் டேணி பாயில் தலைமையிலான விழாக் குழுவினர்தான் தொடக்க விழா நிகழ்ச்சிகளை இறுதி செய்து வருகின்றனர். இதே பாயில் இயக்கிய ஸ்லம்டாக் மில்லியனர் படத்தில் ஏ.ஆர்.ரஹ்மான்தான் இசையமைத்திருந்தார். இதன் மூலம் ஒஸ்கர் விருதுகளையும் அவர் வென்றார்.

இந்த நிலையில் பாயிலுடன் மீண்டும் இணைந்துள்ளார் ரஹ்மான். ஒலிம்பிக் தொடக்க விழாவில் எந்த மாதிரியான பங்களிப்பை ரஹ்மான் தரவுள்ளார் என்பது தெரியவில்லை.

இருப்பினும் ஏற்கனவே உருவாக்கிய பாடலாக இல்லாமல்,பிரத்யேகப் பாடலாக 'ரஹ்மான் உருவாக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது



"வெற்றிகரமான
எதிர்காலத்தினை நோக்கிப்
பயணியுங்கள்"

ஜாதிக சம்பத - இன்றைய சுப்பர் பரிசு

அறுபத்து
மூன்று இலட்சம்

ரூபா. 6,330,996.00

உங்களையும் நாட்டையும் வளமாக்கும்

தேசிய லொத்தர் சபை

(C/1614)

# பருத்தித்துறை முதல் அம்பன் வரை உவர்நீர் தடுப்பு அணை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து அம்பன் வரையுமான சுமார் 5 கிலோ மீற்றர் நீளமான உவர்நீர் தடுப்பணை அமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியிருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகள் மோசமான பாதிப்புக்குள்ளாகியிருந்தன.

இதனைக் கருத்திற்கொண்டு மேற்படி பகுதிகளில் ஆழிப்பேரலை ஆபத்தினைக் கருத்திற்கொண்டு இந்த 5 கிலோ மீற்றர் நீளமான உவர்நீர் தடுப்பணை அமைக்கும் பணிகள் யாழ். மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளரின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வேலைத் திட்டத்தை யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கண்காணித்து வருகிறது.

இந்த வேலைத் திட்டத்தின் சுமார் 80 வீதமான வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மூன்று கட்டடங்கள் முல்லையில் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செல்வபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட 3 கட்டடங்களின் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் இடம்பெற்றது.

10 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட சுற்றுலா விடுதியும் அரச பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான விடுதியும், 2 தொடரான கட்டடங்கள் தலா 7 மில்லியன் ரூபா செலவிலும் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன, பிரதியமைச்சர் விஜயதிஸ்ஸநாயக்க ஆகியோர் கலந்துகொண்டு திறந்துவைத்தனர். (04)

# தவறி வீழ்ந்து கை முறிந்தது

(யாழ்ப்பாணம்)

பலா மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து கை முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று மாலை 4.00 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி பிரேமதாஸா (வயது - 53) என்பவரே வல்வெட்டித்துறை இந்திராணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# மதகு நிர்மாணத்தில் முறைகேடு பொது அமைப்புக்கள் போர்க்கொடி

(முல்லைத்தீவு)

குமுளமுனை கிழக்குப் பகுதியில் மதகு ஒன்றின் கட்டுமானத்தில் மோசடி இடம்பெற்றிருப்பதாகவும் அதனை விசாரித்து அப்பகுதி மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்து உதவும் படி அப்பகுதியில் இயங்கும் பொது அமைப்புக்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக இந்த பொது அமைப்புக்கள் மகஜர் ஒன்றை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளன.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எமது கிராமத்தில் அக்ரட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் உட்கட்டுமான வேலைகளின் போது பிரதேச சபைக்குச் சொந்தமான குமுளமுனை வன்னியன் மேட்டு வீதியில் கல்வெட்டு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வந்தது. அதனை பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலரே மேற்பார்வை செய்து பார்வையிட்டு வந்தார்.

இவ்வேலை ஒப்பந்தகாரர்கள் 4 அங்குலத்திலும் குறைந்த ஆழத்தில் கல்வெட்டுக்கு அத்திவாரம் இட்டதையும் மிகவும் மோசமான கலவையில் சீமெந்து பாவித்ததையும் கண்ட ஊர்மக்கள் கமக்காரர் அமைப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அலுவலர் ஆகியோரிடம் முறையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து நாம் உரிய இடத்திற்குச் சென்று வேலையை பார்வையிட்டு உரிய ஒப்பந்தகாரருடன் தன்மையாகப் பேசி வரைபடம் உரிய ஒப்பந்த வேலைப் பட்டியலுடன் அதன் வேண்டுகைக்கு அமைய வேலை செய்யுமாறு வேண்டியதுடன் அக்ரட் நிறுவனத்து தொழில்நுட்ப அலுவலரையும் வெளிக்கள ஊழியரையும் தொடர்பு கொண்டு எமது பக்க நியாயங்களைக் கூறி இக்கல்வெட்டு சிறு மழைக்குக்கூட நின்று நிலைக்காது என்பதனை கூறினோம்.

அவர்களும் அதை ஏற்று வரைபடம், 'எஸ்ரிமேற்' என்பன வேலைத்தளத்தில் வைக்கப்படும் எவரும் வேலையை பார்வையிட முடியும் எனக் கூறிச் சென்றனர். இது நடந்தது 18.06.2012 அன்று. இதன்பின் 20.06.2012 மாலை 5.45 மணிக்கு வந்த பிரதேச சபை (கரைதுறைப்பற்று) தொழில்நுட்ப அலுவலர் எம்மை வரும்படி அக்ரட் பணியாளர் மூலமும் தொலைபேசி மூலமும் 5 தடவை அழைப்பு விடுத்தார்.

அப்போது நானும் கமக்காரர் அமைப்பு தலைவரும் முல்லைத்தீவில் இருக்கின்றோம். வருகின்றோம் எனக்கூறி வேகமாக வந்து இவரை சந்திக்க முற்பட்டபோது அவர் இவர்களுக்கு என்ன தெரியும். இவர்களால் ஒண்டும் செய்ய முடியாது. இது என்ர றோட் நீ செய்த மாதிரி வேலையை செய் என்று கூறிவிட்டு எம்மை மதிக்காது நடந்து கொண்டார்.

இதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே போலவே எமது கிராமத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதி இவ் அலுவலரின் பொறுப்பற்ற செயலால் எமது சந்தை மலசலகூடம் மற்றும் வீதிகள் என்பன பூசி மெழுகப்பட்டுள்ளது என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருவதோடு இவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பாலங்கள் ஒரு வருடத்தினுள் உடைந்த நிலையில் தற்போது காட்சிளிப்பதும் இங்கு குறிப்பிடமுடியும்.

எனவே இம் மோசடியை உடன் தாங்கள் தலையிட்டு நிறுத்த வேண்டும் என தயவாக வேண்டுகிறோம் என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 'உதயன்' உண்மைக்குப்...

அபகீர்த்திக்குள்ளாக்கும் ஒரு செய்தியாகையால் இதனை தான் கடுமையாக கவனிப்பதாகவும் தெரிவித்திருந்தார். தொடர்ந்து 'உதயன்' பத்திரிகை ஆசிரியரை எச்சரிக்கையில், பல சட்டத்தரணிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு 'உதயன்' பத்திரிகையில் வெளிவரும் உண்மைக்குப் புறம்பான செய்திகள்பற்றி அவர்களிடமிருந்து தனக்கு பல தடவைகள் முறையிடப்பட்டதையும்பற்றி தெரிவித்திருந்தார்.

நேற்றைய வழக்கு விசாரணைகளின் ஆரம்பத்தில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவியாக இருந்துகொண்டு யாழ். நீதித்துறைக்கு திட்டமிட்டு அபகீர்த்தி ஏற்படுத்திய ஒருவருக்கு ஆதரவாக யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவி எவ்வாறு ஆஜராகலாம் என எதிர் தரப்பு சட்டத்தரணிகளால் கேள்வி எழுப்பப்பட்டது. இதனால் கலவரமுற்றுக் காணப்பட்ட செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் சில நிமிடங்கள் 'உதயன்' ஆசிரியர் சார்பாக சமர்ப்பணங்கள் செய்தபின்னர் தான் மேற்கொண்டு சொல்வதற்கு ஒன்றுமில்லை எனத் தெரிவித்து நீதிமன்றைவிட்டு வெளியேறியிருந்தார்.

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தனது சமர்ப்பணத்தில் 'உதயன்' செய்தி குறிப்பிடும் சம்பவதினத்தில் தான் யாழ். நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்ததை குறிப்பிட்டு 'உதயன்' செய்தியில் குறிப்பிட்டதைப்போல் யாழ் நீதவான் சட்டத்தரணி சுமந்திரனிடம் மன்னிப்பு எதனையும் கோரவில்லையென்பதை உறுதிப்படுத்தி அவ்வாறு அவதூறு செய்தியைப் பிரசுரித்தமைக்கு காரணம் காட்டுவதற்கு 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கு கால அவகாசம் வழங்கி விசாரணையை ஒத்திப்போடுமாறு விண்ணப்பித்தார்.

பெயர் குறித்த யாழ் சட்டத்தரணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சமர்ப்பணங்கள் செய்த சட்டத்தரணி ரெங்கன், யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணமளிக்கின்ற ஒரேயொரு நிறுவனங்களாக தற்போது நீதிமன்றங்களே உள்ளன எனவும், இந்த நிறுவனங்களை உடைக்க எவருக்கும் நீதிமன்றம் இடமளிக்கலாகாது என்றும், நீதவானையோ நீதிமன்றையோ மதிப்பிறக்கும் செய்யும் செய்திகள் நீதிமன்றை அவமதிக்கும் செயல் எனவும், இதற்கு 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் இன்று பதிலேதும் தராதது மட்டுமன்றி அவ்வாறு பதில்தர கால அவகாசம் ஏன் தேவை என்பதற்கும் காரணங்கள் கூறாமல் கால அவகாசம் கோருவது இது திட்டமிட்டு வெளியிடப்பட்ட செய்தி என்பதை உறுதிப்படுத்துவதாகவும், இதற்கு 'உதயன்' ஆசிரியர் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டுமென்பதுடன், நாளைய தனது பதிப்பில் முக்கியத்துவம் கொடுத்து தனது வாசகர்களிடமும் பொது மக்களிடமும் பகிரங்க மன்னிப்பொன்றை பிரசுரிக்க வேண்டுமெனவும், இந்த நீதிமன்ற அவமதிப்பு விடயத்திற்காக 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு பொலிஸார் கட்டளையிடப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தார். முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் வரதராஜா, விக்னராஜா மற்றும் சட்டத்தரணிகள் சிறீகாந்தா, றெமிடியஸ், ஸர்மினி ஆகியோரும் 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக ஏன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என சமர்ப்பணங்கள் செய்திருந்தனர்.

விசாரணையின் இறுதியில் 'உதயன்' ஆசிரியர் பகிரங்க மன்னிப்புக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்தும், நீதிமன்று கோரியபடி இன்றைய பதிப்பில் தனது வாசகர்களிடமும் பொதுமக்களிடமும் பகிரங்க மன்னிப்புக்கோரி அறிவித்தல்விட இணங்கிக்கொண்டதைத் தொடர்ந்தும், அவர் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது எனக் காரணம் காட்டுவதற்கு வரும் யூலை மாதம் 9 ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுத்த நீதவான் வழக்கை ஒத்திவைத்தார். முழு விசாரணைகளும் ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் நடைபெற்றிருந்ததுடன், விசாரணை முழுவதும் நீதிமன்று பார்வையாளர்களால் நிறைந்து காணப்பட்டதுடன், 'உதயன்' உரிமையாளர் சரவணபவன் நீதிமன்றில் தனது அரச பாதுகாப்பு உத்தியோகத்தருடன் பிரசன்னமாகியுமிருந்தார். (எஸ்)

## வடக்கு...

என்பதையும் ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார்.

உடனடியாகவே வடமாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு தாம் விரும்பியிருந்த போதிலும் மக்கள் மீள்குடியேற்றம் முழுமையாக இடம்பெறாத நிலையிலும் கண்ணிவெடிகள் மிதிவெடிகள் முழுமையாக அகற்றப்படாத நிலையிலும் அரசாங்கம் வடமாகாண சபைத்தேர்தல்களை நடத்த எண்ணவில்லை என்பதனை தெளிவுபடுத்திய ஜனாதிபதி இந்திய அரசினால் வழங்கப்படும் 50 ஆயிரம் வீட்டுத்திட்டமும் இக்காலப்பகுதியில் பூரணமடைந்துவிடும் என்பதுடன் இடம்பெயர்ந்த மக்கள் அங்கு நிரந்தரமாக குடியேறிவிடுவார்கள் என்ற நம்பிக்கையினையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

## பொன்சேகா...

இதனைத் தெரிவித்தார். ஜனநாயகக் கட்சி எனும் புதிய அரசியல் கட்சிக்கு சரத் பொன்சேகா தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில்....

அதி வேகமாக சென்ற போது வாகனமொன்றினை முந்திச் செல்ல முற்பட்டவேளையில் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த பாலமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இதன் காரணமாக பேருந்தின் பின்பகுதி சில்லுகள் உடைந்து வாகனம் நிலத்தில் சிறிது தூரம் உருண்டு சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வவுனியா பொது வைத்தியசாலை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் நோயாளர் காவு வண்டிகள் விரைந்து வந்து காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றது.

இவ் விபத்தில் 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

## டிப்ளோமா...

அரச அதிபரிடம் கையளித்துள்ளனர்.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா ஆகியவற்றில் பட்டம் பெற்ற பட்டதாரி பயிலுனர் ஆட்சேர்ப்பில் உள்வாங்க முடியாது என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். உயர் தேசிய தொழில்நுட்பக் கல்லூரி பட்டதாரிகள் குழப்பமடைந்ததுடன், பட்டதாரிகளிடையே கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டு தமது நியமனம் தொடர்பில் கலந்தாலோசனை மேற்கொள்ளுமாறு பல்வேறு தரப்பினரிடமும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக்கோரிக்கைகளைத் தொடர்ந்து யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி பட்டதாரிகள் யாழ். அரச அதிபரைச் சந்தித்த போதே அரச அதிபர் நியமனம் வழங்கப்படுமென தமக்கு உறுதியளித்துள்ளதாக யாழ். உயர் தேசிய கணக்கியல், முகாமைத்துவ, வர்த்தக பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (எஸ்)

## வவுனியா சிறைச்சாலையில்...

வரப்படவேண்டுமென தெரிவித்து உண்ணாவிரதம் இருந்து வந்த 38 அரசியல் கைதிகளும் நேற்றுமுன்தினம் பிற்பகல் அரசியல் கைதிகளின் சிறைக்கூடத்திற்குள் சென்ற சிறைக்காவலர்களை பிடித்து வைத்ததுடன் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதியை வவுனியாவிற்கு கொண்டுவந்தாலேயே இவர்களை விடுவிப்போம் எனத் தெரிவித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் சமரசப்பேச்சுக்கள் இடம்பெற்றும் பயனளிக்காத நிலையில் நேற்றுக் காலை அவர்களை மீட்பதற்காக பெரும் எண்ணிக்கையான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பலத்த திட்டமிடலுடன் சிறைக்குள் செல்வதற்கு முயன்று மதியமளவில் அரசியல் கைதிகளின் சிறைக்கூடத்திற்கு கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசியெறிந்ததுடன் வாயிற்கதவினை உடைத்து உட்சென்று மூன்று சிறைக்காவலர்களையும் மீட்டெடுத்தனர்.

இவ் மீட்பு நடவடிக்கையில் சிலர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சிறைச்சாலைக்கு அருகில் உள்ள பாடசாலையான இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் நான்கு பேர் கண்ணீர்ப்புகைக்குண்டின் தாக்கத்தால் மயங்கி வீழ்ந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிறைச்சாலையை சுற்றிலும் நேற்றுக் காலை முதல் பதற்றமான நிலை காணப்பட்டதுடன் சிறைச்சாலை மற்றும் நீதிமன்றத்திற்கு செல்லும் வீதிகள் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

# இந்திய தீவிரவாதிகளுக்கு கொழும்பில் ஆயுதப் பயிற்சியா?

## காலம்கடந்து கசிகிறது அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இந்தியாவின் புனே நகரில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜேர்மன் பேக்கரி குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மிர்ஸா ஹிமாயட் பெய்க் என்பவருக்கு லக்ஷர் ஈ தொய்பா உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் பயாஸ் காக்ஸி, கொழும்பி லுள்ள இரகசிய முகாமொன்றில் வைத்து ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டதாக மஹாராஷ்டிர மாநில பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆட்சேர்ப்பு மற்றும் குண்டுத் தயாரிப்பு தொழில்நுட்பம் தொடர்பாக 2008 ஆம் ஆண்டு கொழும்பில் 3 வார கால பயிற்சியை பெய்க்கிற்கு காக்ஸி வழங்கியதாக மாநில பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இப்பயிற்சியின்போது பெய்க்குடன் மற்றொரு நபரும் சமுகமளித்திருந்தாக பி.ரி.ஐ. செய்திச் சேவையிடம் மேற்படி அதிகாரி கூறினார்.

கொழும்பு நகரம் பாதுகாப்பானது எனவும் பாதுகாப்பு முகவரங்கள் எதுவும் சந்தேகம் கொள்ள மாட்டாது என்பதாலும் இம்மூவரும் கொழும்பை தெரிவுசெய்தனர். அத்துடன் நாட்டை வந்தடைந்தவுடன் விசா வழங்கும் முறைமையை அப்போது இலங்கை கொண்டிருந்தது. இப்பயிற்சியின் பின்னர் எதிர்காலத்தில் தொடர்பில் இருப்பதற்கான தகவல் தொடர்பு வழிகள் குறித்து இவர்கள் தீர்மானித்தனர் என அவர் கூறினர்.

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற புனே ஜேர்மன் பேக்கரி குண்டு வெடிப்பில் 17 பேர் கொல்லப்பட்டதுடன் 56 பேர் காயமடைந்தனர். அவ்வருடம் செப்டெம்பர் மாதம் புனே நகரில் பெய்க் கைது செய்யப்பட்டார்.

### சதொசாவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள 40 சதொச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பல்வேறு முறைப்பாடுகளின் அடிப்படையில் 40 சதொச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை யின் தலைவர் ரூம் மப்றூக் தெரிவித்தார்.

## இணையத்தளச் செய்தி அலுவலகத்தில் 9 பேர் கைது

(கொழும்பு)

லங்கா மிரர் இணையத் தளத்தின் அலுவலகத்தை நேற்று சோதனையிட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி), அங்கிருந்த 9 பேரை கைது செய்துள்ளனர். எதுல்கோட்டே பகுதியிலுள்ள மேற்படி அலுவலகத்திலிருந்து மடிக்கணினி உட்பட 7 கணினிகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, நாரஹென்பிட்டி அண்டர்சன் தொடர்மாடியிலுள்ள, ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தளத்தின் ஆசிரியர் ருவன் பேர்டினன்ட்டின் வீட்டிலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சோதனையிட்டனர்.

அவரின் வீட்டிற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் சென்றிருந்தனர். அவர்கள் மடிக்கணினிகளை சோதனையிட்டதுடன் அங்கிருந்த சிலரிடம் வாக்கு மூலங்களையும் பெற்றனர்.

## தகவல் தொழில்நுட்ப அறிவை 70 வீதமாக உயர்த்துவதே இலக்கு

சர்வதேச நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடிய தகவல் தொழில்நுட்ப அறிவுடன்கூடிய இளைய தலைமுறையைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ள முடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போதே ஜனாதிபதி இந்தக் கருத்தினை கூறினார்.

ஆயிரம் இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கும், போதனை ஆய்வு டிப்ளோமா தாரிகளுக்கும் ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

சர்வதேசத்துடன் இணைந்து முன்னோக்கிச் செல்லும்போது, தகவல் தொழில்நுட்ப அறிவின் அவசியம் குறித்தும் இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப அறிவு 5 வீதமாக காணப்பட்டதோடு, தற்போது 35 முதல் 40 வீதமாக தொழில்நுட்ப அறிவு காணப்படுவதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் இதனை 70 வீதமாக உயர்த்துவதே அரசாங்கத்தின் இலக்காகவுள்ளது. ஆசிரியர் தொழிலின் கௌரவத்தைப் பாதுகாப்பதன் மூலம் ஒழுக்கமான சிறந்த சந்ததியினரைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென ஜனாதிபதி இதன்போது கூறியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவிகள் துஷ்பிரயோகம் அதிபர் கைது

மாணவியர் ஒன்பது பேரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாகக் கூறப்படும் திவுலப்பிட்டிய, கெஹெல்எல்ல பகுதி ஆரம்பப் பாடசாலை ஒன்றின் அதிபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். பெற்றோரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாணவியர் ஒன்பது பேரும் மருத்துவ பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஐந்து அமைச்சர்கள் அடங்கிய குழு

(கொழும்பு)

வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு துரித நிவாரணம் வழங்குவதற்கென ஐந்து அமைச்சுக்களடங்கிய விசேட குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஏக்கர் நிலப்பரப்பிற்கும் உடனடியாக நஷ்டஈடு வழங்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி முதற்கட்டமாக குடிநீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள 12 மாவட்டங்களுக்கும் 218 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய வரட்சியான காலநிலை குறித்து அமைச்சரவையில் ஆராயப்பட்டதோடு இதனுடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் இணைத்து பரந்த அளவிலான திட்டம் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இதேவேளை, கிரிதலே பிரதேச விவசாயிகள் விவசாயத்திற்கு நீர் வழங்கக் கோரி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

### செப்பனிடப்படாத வீதிகளால் தொடரும் விபத்துக்கள்

(தீவகம்)

யாழ்ப்பாணம், குறிகாட்டுவான் வீதியில் நீர்கடவைப் பாலப் பகுதியில் இருக்கும் வீதியின் சீரற்ற தன்மையால் தொடர்ந்து விபத்துக்கள் சம்பவிக்கின்றன. நேற்று மாலையிலும் ஒரு மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் இடறி விழுந்ததில் இருவர் காயங்களுக்குள்ளாகி உள்ளனர்.

நயினாதீவு அம்மன் பெருந்திருவிழா நடைபெற்று வரும் இந் நாட்களில் போக்குவரத்து அதிகமாக உள்ளது. (85)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனம் வழங்கல்

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்க நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்ப 9.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது கடந்த யூன் மாதம் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ்.மாவ செயலகத்தில் நடைபெற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட் குச் சமுகமளித்தோரில் 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆ திகதிக்கு முன்பதாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்ற பட்டம் பெற்றவர்கள், வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றா பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பல்கலைக்கழகமென சான்றிதழ் சமர்ப்பித்தவர்கள் அனைவ மேற்படி நிகழ்விற்கு சமூகமளித்து தமது நியமனக் கடிதங்க பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.அரசாங்க அதி கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் உயர் தொழில்நுட்ப நிறுவகத் டிப்ளோமா பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்குவது தொட பின்னர் அறியத்தரப்படும் எனவும் அரசாங்க அதி தெரிவித்துள்ளார்.

### மட்டக்களப்பில் நேற்று பட்டதாரிகள் 1400 பேருக்கு நியம

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல்முறையாக 1400 யற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்கள் நேற்று வழங்கி கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்தா யல் கற்கைகள் நிலையத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளித ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோ அடிப்படையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள

## இறைவனுக்காக ஏற்றப்ப விளக்கால் வீடிழந்த குடும்



சுவாமிப் படத்துக்கு ஏற்றப்பட்ட விளக்கு இருக்கும் இருப்பிடத்தை எரித்துச் சாம்பலாக்கிய சம்பவம் ஒன்று நேற்றுக் காலை வேலணை அம்பிகைநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வரும் இக் குடும்பம் கொட்டில் வீட்டில் வசித்து வருகின்றது. இந்நிலையில் இக் குடும்பத்தின் இருப்பிடம் தினால் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளதால் தற் அக் குடும்பம் நிர்க்கதியாகி தற்போது இருப்பதற்கு இடமில்ல நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தை நேரில் சென்று பார்வையிட்ட வேல பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா அக் குடும்பத் தற்போது தேவையான அவசர உதவிகளைச் செய்த அக்குடும்பத்தினருக்கு ஆறுதலும் தெரிவித்துள்ளார். (

## சுகாதாரம் பேணல் யாழில் தேய்வடைகிற

யாழ்.நகரில் உள்ள சில உணவக மற்றும் வாணிப நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் பொதுமக்களுக் கான உணவுப் பண்டங்களை விநியோகிக்கப்படும்போது சாதாரண விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லையென பொதுமக்களால் குற்றம் சாட்டப் படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

கடந்த புதன்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஒரு வாணிப நிலையத்திற்கு பேரீச்சைப்பழம் வாங்கச் சென்ற ஒருவர் அவ்வாணிப நிலையத்தின் பணியாளர் தனது னால் பேரீச்சம்பழத்தை எடுத்தபோது பழம் வ சென்றவர் அருவருப்பு த்தை வாங்காது திரும்பி றதை காணக்கூடியதாக தது.

யாழ்.நகரில் உணவக வாணிப நிலையங்களில் வாறான சுகாதாரச் சீர்கே தின்பண்டங்கள் விநியோ பதை வணிக நிலைய உ யாளர்கள் மற்றும் சுகா பகுதியினர் கவனத்தில் வேண்டுமென பொதும கேட்டுக்கொள்கின்றனர்.

## கிணற்றின் உள்ளே தூக்கில் தொங்கிய சட

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் கிணறு ஒன்றினுள் தூக்குப் போட்டு இறந்ததாகக் கருதப்படும் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவரது சடலம் நேற்று முற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் யாழ்.பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை கெனடி ஒழுங்கையைச் சேர்ந்த இராசையா விக்கினேஸ்வரன் (வயது-37) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தூக்கு மாட்டி இறந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் இவர் அவரது வீட்டின் பகுதியில் அ ருந்த கிணற்றின் வாளிக் ற்றை கிணற்றுக் கப்பில் தூக்குப் போட்டு கிணற் பாய்ந்து இறந்ததாகத் வருகின்றது.

நேற்றுக்காலை சம்ப திற்கு விரைந்த யாழ்.பொ சடலத்தை கிணற்றிலிருந் துடன் சம்பவ இடத்தில் மரண விசாரணை அதிக உதயசிறி மரண விசா நிகழ்த்தியதுடன், சடலத் வினர் களிடம் ஒப்படை றும் உத்தரவிட்டார். (எ

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்ப